# வ.வே.சு. ஐயர்

CONNEMARA PUBLIC LIBRARY
1 - APR 1958



கழக வெளியீடு

(805)

கழக வெளியீடு : ௲கூஎ

# வ. வே. சு. ஐயர்

... PUBLIC LIBRARY
1 - APR 1958

ஆசிரியர் :
திரு. புலவர் அரசு

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி, :: சென்னை-1.

First Edition: Sep., 1951

[All Rights Reserved]

*Published by:*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140 Broadway, Madras-1.

# பதிப்புரை

எத்தனையோ பெரியார்கள் நம்மிடையே தோன்றினார்கள். நாட்டிற்கும், நாட்டில் நிலவும் மொழிக்கும், மொழியைச் சார்ந்த இலக்கியத்திற்கும் தாய்நாட்டின் விடுதலைக்கும் பணியாற்றி மறைந்தார்கள். நமக்கு வழிகாட்டும் எண்ணற்ற நிகழ்ச்சிகள் அவர்கள் வாழ்வில் வளமடைந்திருப்பதை நாம் காண்கிறோம்.

வ. வே. சுப்பிரமணிய ஐயர் தந்நலம் விடுத்து நாட்டுப்பணி புரிதலையே வாழ்வின் நோக்கமாகக்கொண்டு செயலாற்றிய உரிமை வீரர். எண்ணற்ற இடுக்கண்கள் நேர்ந்த காலத்திலும், வறுமைச் சூறாவளியில் சிக்கியுழன்ற காலத்திலும் மனந்தளராது தாய்நாட்டின் விடுதலைக்குப் போராடியவர். அவர்தம் வரலாற்றை இளஞ்சிறார்களும் அறிய எண்ணியே இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

தெள்ளிய நடையில் இந்நூலை உருவாக்கித் தந்த திரு. புலவர் அரசு அவர்கட்கு எங்கள் நன்றி. தமிழகம் இந்நூலை ஏற்றுப் பயனெய்துமாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

உயர் திரு. வ.வே. சுப்பிரமணியஐயரவர்களைப் பற்றி முன்னரே சில நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் திரு. சுத்தானந்த பாரதியாரவர்களின் வீரவிளக்கு என்னும் பெருநூலும், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்களின் நூலும் சிறப்பானவை. தமிழ்மக்கள் ஐயரவர்களின் வீரவரலாற்றினை அறிந்து பயன்பெற அவை பெரிதும் உதவின.

மாணவருலகமும் அப்பெருந்தகையின் வரலாற்றினை அறிந்து அறிவும் வீரமுஞ் செறிந்து விளங்க இச்சிறு நூல் வெளிவருகின்றது.

இப் பணியில் பெரிதும் துணைபுரிந்த பழைய நூல்களின் ஆசிரியர்கட்கும், பதிப்பாளர்கட்கும் என் நன்றி எழுமையும் உரியதாகுக.

பூவிருந்தவல்லி.
20-9-1951.

நூலாசிரியன்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | தோற்றுவாய் ... ... | 1 |
| உ. | இளமையும் கல்வியும் ... ... | 4 |
| ந. | வழக்கறிஞர் ... ... | 6 |
| ச. | 'பாரிஸ்டர்' படிப்பு ... ... | 9 |
| ரு. | புரட்சிக்கனல் ... ... | 12 |
| சு. | வாழ்க்கைச் சுழல் ... ... | 48 |
| எ. | பிற்காலம் ... ... | 67 |

# வ. வே. சுப்பிரமணிய ஐயர்

## க. தோற்றுவாய்

"தோன்றிற் புகழோடு தோன்றுக! அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்று வள்ளுவர் மொழிகிறார். 'புகழில்லாதவர் மக்களாய்ப் பிறப்பதினும் விலங்காய்ப் பிறப்பதே நன்று,' என்பது அக்குறளின் கருத்து. ஊனுடம்பு கெடினும் புகழுடம்பு கெடாது! அழிவில்லாத புகழுடம்பைப் பெற ஒவ்வொருவரும் முயலுதல் வேண்டும். அத்தகைய புகழுடம்பைப் பெறுதல் எங்ஙனம்? வீரனாக வாழலாம், புலவனாக வாழலாம், கலைஞனாக வாழலாம், வள்ளலாக வாழலாம்—இவைகளெல்லாம் புகழ்தரும் வாழ்க்கையே. எனினும், எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் நற்பணியொன்றே நற்புகழ் நல்குவது. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற பொன்மொழியை உன்னுக! இத்தகைய இசைமிகும் யாக்கையைத் தாங்கிய நிலமே வசையிலா வண்பயனைப் பெறுவது; உன்னுதொறும் ஊற்றின்பம் பெருகுவது. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்—நற்றவ வானினும் நனி சிறந்தன.' நாடெங்கும் வாழ வைத்தாற் கேடொன்றும் எய்தாது; பேரின்பம் எய்துவிக்கும்.

தான் பிறந்த நாடு வாடத் தான்மட்டும் பெருஞ் செல்வத்திலே திளைப்பவன் நடுவூருட் பழுத்த எட்டி மர

மாவான். நாட்டின் நிலையை நினைந்து நினைந்து நற்பணி பலவும் புரிந்து புரிந்து, நாடொறும் மகிழ்வோனே அந்த நாட்டிற் பிறந்த பயனைப் பெற்றோன். நாடு வாழ விரும் பாதவன் தான்மட்டும் வாழவிழைதல் எற்றுக்கோ? நாம் பிறந்த நாடு, நம் தந்தை பிறந்த நாடு, பாட்டனார் பிறந்த நாடு, நம் முன்னோர் பிறந்த நாடு, நம் மக்களும் மக்களுக்கு மக்களும் பிறக்கும் நாடு! நாம் பிறந்தது மட்டுமோ? வளர்ந்தோம்! வளர்வதற்குப் பலவகை உணவுகளைப் படைத்துக் கொண்டோம்! உண்டோம்! மடிமீது உறங்கினோம்! பின்னும் இறப்போம்! இறந்து மண்ணோடு மண்ணாகக் கலப்போம்! எங்கே? நம் தாய் நாட்டிலேதான். பெற்ற தாயினும் பிறந்த நாடு பெரிய நன்றிக்குரியது! தாய் வாட விரும்பாத நாம், தாய் நாடு வாட விரும்புதல் தகுதியா? எனவே, நாட்டுப் பணியே நலந்தருவது.

நாட்டுப் பணி என்பது என்ன? நாட்டு மக்களுக் குப் புரியும் பணியேயாம். 'தனி யொருவனுக்கு உண வில்லை யெனிற் சகத்தினை அழித்திடுவோம்' என உள்ளத்திலே உணர்ச்சிகொண்டு ஒவ்வொரு மனிதனும் உண்டியும் உடையும் உறையுளும் உரிமையாகப் பெற்று வாழ உழைப்பதுதான் நாட்டுப்பணி. அவ்வாறு உழைக் கும் தொண்டரின் பெருமை சொல்லவும் பெரிதே!

எவருக்குத் தம்மியற்கையிலே பிறவுயிர்களின்மேல் இரக்கம் எழுகிறதோ, எவர் பிறர் நோயைத் தம் நோய் போற் பாவித்து 'எரியின் இழுது' ஆகின்றாரோ, அவரே நாட்டுப் பணியிலே நாட்டஞ் செலுத்தற்குரியார். வெறும்புகழை மட்டும் விரும்புவோர் புகழை நிறுத்துப் பார்ப்பாரேயன்றிப் பணிபுரிவதிலே மனத்துடிப்புக் கொள்ளார். இரக்கம் என்பது கல்வியறிவினாலோ, கைந்

நிறைந்த பணத்தினாலோ வருவது அன்று. 'நட்புந் தயையும் கொடையும் பிறவிக் குணம்.' இரக்கப் பண்பி லானை இடித்துக் கூறிப் பண்பிற் செலுத்த முடியாது. அவ்வாறு செலுத்த இயலுமானால் எத்துணையோ காந்தி களையும், திலகர்களையும், நேருக்களையும், கப்பலோட்டிய தமிழர்களையும் உண்டாக்கிவிட முடியுமே நம்மால்! எனவே, இரக்கம் இயற்கையாகவே அமையவேண்டும்.

இவ்வாறு இயற்கையாகவே இரக்கம் மிகுந்து, தந் நலத்தைச் சிறிதும் நாடாமல், நாட்டுப் பணி புரிதலையே வாழ்வின் நோக்கமாகக் கொண்ட பெரியோர்களில் வ. வே. சுப்பிரமணிய ஐயரும் ஒருவராவார். உரிமைப் பேச்சைப் பேசவும் உளம் நடுங்குங் காலத்திலே தமிழ் நாட்டில் உரிமை முழக்கஞ் செய்தவர்கள் வ. உ. சிதம் பரனாரும், பாரதியாரும், சுப்பிரமணிய சிவாவும், வ. வே. சுப்பிரமணிய ஐயரும் ஆவார்கள். அவர்களில், வ. வே. சுப்பிரமணிய ஐயரின் வரலாற்றையே நீங்கள் இப்போது படிப்பீர்கள்.

ஐயரமைத்த குருகுலத்தில் நெருங்கிப் பழகி உட னிருந்தவர் யோகி சுத்தானந்த பாரதியார். புதுவையில் மறைந்து வாழ்ந்தபோது உடனிருந்த நண்பர் சி. சுப்பிர மணிய பாரதியார். இவரை அறிந்தவர்கள் மேன்மை தங்கிய இராஜாஜி, டாக்டர் வரதராசலு நாயுடு, ஈ. வே. ராம சாமிப் பெரியார், திரு. வி. கலியாண சுந்தரனார் முதலியோர். டாக்டர் சௌந்தர ராஜன் கல்லூரித் தோழரும், இந்திய விடுதிக் கூட்டாளியுமாவர்.

## உ. இளமையும் கல்வியும்

திரிசிரபுரம் சோழநாட்டிலே வரலாற்றுச் சிறப் புடையது. அதனைச் சார்ந்த வரகநேரி என்னும் சிற் றூரே வ. வே. சுப்பிரமணியர் பிறந்த ஊர். அச்சிற்றூர் காவிரிப் பாய்ச்சலால் வளம் பெற்றது; நிலமகளுக்குப் பச்சைப் படாம் விரித்தாற் போன்ற இனிய காட்சியுடை யது. ஐயரின் தந்தையார் ஆங்கிலங் கற்றவர்; கல்வித் துறையிலே அலுவல் ஆற்றியவர்; வேங்கடேசையர் என்னும் பெயரினர். ஐயரின் அன்னையார் ஈரோட்டுக் கண்மையிலுள்ள சின்னளம்பட்டியிற் பிறந்தவர்; காமாட்சி என்னும் பெயரினர். இருவரும் ஆற்றிய இல்லறத்தின் கனியாக 2-4-1881-இல் ஐயர் தோன்றினர். பெற்றோர் இவருக்கு வேங்கட சுப்பிரமணியன் எனப் பெயரிட்டுச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். அன்னையூட்டிய பாலுடன் நம் நாட்டு வீரர்களின் வரலாற்றுச் சாறும் கலந்து பருகினர் ஐயர். பெயருக்கேற்றவாறே 'மணி' ஆக வளர்ந்தார்.

ஐயரின் தந்தையாரே வீட்டில் எண்ணும் எழுத் தும் இவருக்குத் தொடங்கிவைத்தார்; ஐரோப்பிய முறையிலே பழகினர். ஐயர் மிஷனரி பள்ளியில் ஆரம் பக் கல்வி கற்றார். இலத்தீனை இரண்டாம் மொழியாக எடுத்துப் படித்தார். படிப்பிலேயே கருத்தைச் செலுத்தி, அறிவைமட்டும் வளர்த்துக்கொண்டு உடல் நலத்தை யோட்டிவிடும் மாணவனாக இராமல், அறி வுடன் யாக்கையும் திண்ணிதாக இருக்குமாறு பார்த்துக் கொண்டார். உடற்பயிற்சியை விடாமற் செய்துவந்த தோடு வீர உணர்ச்சியையும் வளர்த்துவந்தார். பள்ளிப் பாடத்தோடு நில்லாமல் வேறு நூல்களையும் விரும்பிப்

படித்தார். கிரேக்க வீரர் கதைகளையும், உரோம வீரர் கதைகளையும் கிளர்ச்சியுடன் படித்தார். 1893-இல் 'மெட்ரிகுலேஷன்' தேர்வில் மாகாணத்தில் ஐந்தாவதாகத் தேறினார்.

பிறகு, கல்லூரியிற் சேர்ந்தார். 1894-1896-இல் 'எஃப்-ஏ' படித்து முதல் வகுப்பில் தேறினார். அப்போது ஷெல்லி, பைரன், ஷேக்ஸ்பியர் முதலியோரின் நூல்களை விரும்பிக் கற்றார். காவியச் சுவையுடன் ஐரோப்பியப் பேரறிஞர்களான எமர்ஸன், ஜான் ஸ்டுவர்ட் மில் போன்றவர்களின் நூல்களிலுள்ள உரிமைச் சுவையையும் பருகினார். ஆங்கிலம், இலத்தீன், வரலாறு, கணிதம் ஆகியவற்றில் நன்கு ஊறினார். அக்காலை இவருடன் அக்கல்லூரியிற் படித்தவர் டாக்டர் ராஜன் ஆவார்.

அக்காலத்திலே இளமை மணமே விரும்பப்பெற்று வந்தது. ஆகவே, 'எஃப் - ஏ' முடிந்தவுடன் பாக்கியலட்சுமி என்ற பெண்ணை ஐயருக்கு அவர் தந்தையார் மணமுடித்து வைத்தார். ஐயருக்கு இளமை மணம் விருப்பமற்றதாயினும், தந்தையின் விருப்பத்தைத் தட்டாமற் செய்துகொண்டார். திருமணம் முடிந்தபிறகு 'பி. ஏ.' வகுப்பில் சேர்ந்து கற்றார். அக்காலை இவருக்கு நோய்வந்து கெடுத்தது. எனவே, ஓராண்டு தடையாயிற்று. 1899-இல் தேர்ச்சியுற்றார். எடுத்துக்கொண்ட வரலாறு, பொருளாதாரம், இலத்தீன் என்னும் பாடங்களில் இலத்தீனில் முதன்மை பெற்றார்.

———

## ௩. வழக்கறிஞர்

அந்நாட்களில் வழக்கறிஞர் துறைக்கே செல்வாக்கு மிகுதி ; வரும்படியும் மிகுதி. எனவே, தந்தைக்கும் மகனுக்கும் அத்துறையிலேயே நாட்டம் சென்றது. 1901-இல் சட்டத்துறையிலே தேர்ச்சி பெற்று 'முதல் கிரேடு ப்ளீடர்' ஆனார். 1902-இல் திரிசிரபுரம் 'ஜில்லா கோர்ட்'டில் தொழில் நடத்த அடிவைத்தார். நான்கு ஆண்டுகள் செலவுக்கேற்ற வரவுடன் அத்தொழிலை ஒழுங்காக நடத்திவந்தார். வழக்கறிஞர் தொழிலில் வரும் வருவாயைத் தாம் துய்ப்பதுடன் தக்கார்க்கும் நன்கு நல்கினார். 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்டார்.'

ஐயர் ஆங்கிலக் காவியங்களோடு நில்லாமல் தமிழ்க் கம்பனையும் வள்ளுவரையும் நெருங்கிப் பழகி அவர்களுடைய இனிமையிலே தோய்ந்திருந்தார். இப்போது வடமொழிக் காளிதாசனும் வான்மீகியுங்கூட அவருக்குற்ற நண்பராயினர். ஆங்கிலம், தமிழ், வடமொழி நூல்களைத் தனித்தனியே கற்றும், ஒப்பிட்டு நோக்கியும் ஆராய்வதையே தமக்கினிய பொழுதுபோக்காகக் கொண்டார் ஐயர். கம்பராமாயணமும், திருக்குறளும், சாகுந்தலமும், ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட், மாக்பெத் போன்றவைகளும், எமர்ஸன் கட்டுரைகளும் பிற உயர்ந்த நூல்களும் ஐயரின் உள்ளத்திலே படி பெற்றன. உணவின் அறுசுவையினும் இலக்கியத்தின் ஒன்பான் சுவையே ஐயரை முற்றுகையிட்டன. ஒன்பான் சுவையினும் வீரச்சுவையே அவரிடம் வீறு பெற்றது! 'வக்கீல்' தொழிலுக்குரிய நேரம் போக மற்ற நேரமெல்லாம் அருங்கலை நண்பராகவே பொழுது போக்கினார்.

ஐயரின் கிளர்ச்சியுள்ளம் திரிசிராப்பள்ளியிலேயே சேர்ந்திருக்க ஒவ்வவில்லை. ரங்கூனில் பசுபதி ஐயரென ஒருவர் இருந்தார். அவர் ஐயருடைய வாழ்க்கைத்துணை வியின் பெரிய தந்தையார் பிள்ளை. பெரிய வணிகர். ஐயருடைய குடும்பத்திற்கு ஊன்றுகோலாக இருந்தவர். அவருடைய ஆதரவில் ரங்கூனில் வாழ்க்கை நடத்த விரும்பினர் ஐயர். பெற்றோர் மனம் இவர் பிரிவை விரும்பவில்லை. எனினும், ஒருவாறு உடன்பட்டனர். தந்தையார், 'உயர்வு பெற்று வருக!' என வாழ்த்தி விடையளித்தார்.

1907-இல் ரங்கூன் வாழ்க்கை தொடங்கியது. மைத்துனர் பசுபதி ஐயர் இவருக்கு வேண்டிய வகை செய்து கொடுத்தார். அங்கிருந்த ஓர் ஆங்கில 'பாரிஸ்ட' ருடன் ஐயர் சேர்ந்து தொழில் புரிந்தார். அங்கிருக்கும் போது சிறிது உருது மொழி பயின்றார். ஆறு திங்கள் ரங்கூனிற் கழிந்தன. ஐயருக்குப் 'பாரிஸ்டர்' பட்டம் பெறும் எண்ணம் எழுந்தது. பாரிஸ்டருக்கே வருவாய் சாலவும் வரும் என நினைத்தார். தம் கருத்தை மைத்து னரிடம் அறிவித்தார். 'ஆவாரை யாரே அழிப்பார்?'

மைத்துனரும் ஒப்பினர். மைத்துனருக்கு லண்ட னிலும் தம் வணிகத்தைக் கிளைப்பிக்க ஆர்வம் எழுந் தது. அங்கே 'உண்டியல் கடை' ஒன்றை வைத்துக் கொண்டு 'பாரிஸ்டர்' படிப்பை முடித்துக்கொள்ளு மாறு ஐயரைக் கேட்டுக்கொண்டார். அவர் விரும்பிய வாறே செய்வதாக அவரளித்த பொருளுடன் மரக்கலம் ஏறினர் ஐயர். ஐயரின் வாழ்க்கைத்துணைவியும், 'பட்டு' என்னும் பெயருடைய மழலைச் சிறுமியான, ஐயரின் பெண்மகவும் மைத்துனருடைய ஆதரவிலே இருந்தனர்.

பெண் குழந்தை ‘பட்டு’வுக்கு அப்போது வயது ஒன்று. தம் அருமைக் காதலியையும், மகவையும் பிரிந்து ‘ஓதற் பிரிவு’ மேற்கொண்டு லண்டனுக்குப் புறப்பட்டார் ஐயர். பாக்கியலட்சுமியோ தம் கணவர் கைநிறைந்த பொருளுடன் சென்று கல்வியை நிரப்பி வருவாரென்று கருதி, மன அமைதியுடன் வழிவிட்டார்.

---

## ௪. 'பாரிஸ்டர்' படிப்பு

ஐரோப்பிய உடை ஒளிவிட, இந்திய ஒழுக்கம் மணம் கமழ, மரக்கலத்திலேறி லண்டனை அடைந்தார் ஐயர். இலிங்கன் எனும் செல்வரால் சட்டப்படிப்பு மாணவர்க்கென 14-ம் நூற்றாண்டிற் கட்டப்பட்ட விடுதி ஒன்று லண்டனில் உள்ளது. அவ்விடுதியில் இருந்துதான் சித்தரஞ்சன தாசர், காந்தியடிகள் முதலா னோர் சட்டங் கற்றனர் ஐயரும் அவ்விடுதியை அடைந் தார். கூடியவரையில் நம்நாட்டு ஒழுங்கை மீறாமல், அங் குள்ள ஐரோப்பிய ஒழுங்கையுந் தொட்டவாறு லண் டனில் இருந்துவந்தார் பாரிஸ்டர் படிப்பு ஒழுங்காக நடந்தது. உண்டியல் வணிகம் உருப்படவில்லை.

இலத்தீன் மொழியறிவிருந்ததாற் சட்ட அறிவு எளிதாகவே வந்தது. அங்கிருக்கும்போதும் கம்பனும் வள்ளுவனும் ஐயரின் கருத்திலே நிரம்பியிருந்தனர். இலக்கியச் சுவையை நுகராத நாள் ஐயரின் வாழ்க்கை யிலேயே வெற்று நாளாயின. ஐயருக்கு ஐரோப்பியரின் கலை வாழ்வு பிடித்தது; சமூக வாழ்வு மட்டும் பிடிக்க வில்லை. எனினும், அவர்களுடைய நாட்டுப்பற்று ஐய ருடைய சிந்தனையைத் தூண்டிவிட்டது. லண்டனை இன்பநாடு என்றும் நம்நாட்டைத் 'தொண்டுநாடு' என் றும் நினைத்தார் அவர்.

லண்டன் சென்றவுடன் மூன்று திங்கள் வரை யில் ஐரோப்பியக் கலைகளில் இசையிலும் கூத்திலும் ஈடுபட்டுப் பழகினார். பிறகு அக் கலைக்காதல் கலைந்தது.

### இந்திய விடுதி

ஐயர், முதலில் உணவுக்காகத்தான் அல்லலுற்றார். ஐயரின் உணவுமுறை வேறு; ஐரோப்பியரின் உணவு

முறை வேறு. சிலநாட்கள் உணவுக்கடையொன்றிலும், சிலநாட்கள் ஒரு வீட்டிலும் உணவுகொண்டார். ஐரோப்பிய உணவு அவருக்கு ஒவ்வவில்லை. லண்டனில் ஏறக்குறைய நூறு இந்திய மாணவர்கள் இருந்தனர். அவர்களை வினவினர். சிலர் ஒரு வீட்டில் ஒன்றுகச் சமைத்துண்பதாக உரைத்தனர். அவ்வீட்டைத் தேடிச் சென்றார் ஐயர். அதுதான் இந்திய விடுதி.

சியாமாஜி கிருட்டின வர்மா என்ற ஒருவர் அந்த விடுதியை ஏற்படுத்தினர். அவர் அங்கு இந்திய உரிமைச் சங்கம் ஒன்றை நடத்திக்கொண்டு பாரிஸ்டராகத் தொழில் நடத்தி வந்தார். அவருடைய உள்ளத்தில் ஊறிய நினைவின் அடையாளமே இந்திய விடுதி. இந்திய உணவுக்காக இந்திய மாணவர் படும் இடுக்கண் கண்டவுடன் இவ்விடுதியை அமைத்தார். பாரிஸின் செல்வியான பிகாஜிகாமா என்ற பெண்மணியும் இந்திய உரிமைச் சங்கத்திற்காக உழைத்தார். இருவராலும் அக்கழகமும், விடுதியும் ஓங்கின.

ஐயர் இந்திய விடுதிக்குச் சென்றபோது, அவரை வரவேற்றவர்களில் விநாயக சவர்க்காரும் ஒருவர். சவர்க்காரே ஐயரின் வாழ்வைப் புரட்சியிற் செலுத்தினவர். அவரை வரவேற்று வினவிய சவர்க்காருக்கு, ‘நான் பாரிஸ்டர் பட்டம் பெறவந்தேன். இசையும் நாட்டியமும் பயிலுகிறேன்,’ என்று ஐயர் விடை கூறினர். சவர்க்கார் வருத்தத்துடன், ‘இத்தகைய பயனற்ற செயல்களில் நம் இளமையைப் பாழ் படுத்தலாமா? நாங்கள் இங்குச் சாலவும் உயர்ந்த நோக்கங்களிலே பொழுதைப் போக்குகிறோம்’ என்றார்.

முதலில், ஐயருக்குச் சவர்க்கரின் நோக்கம் சிறிதும் விளங்கவில்லை. பிறகு, பழகப் பழகத் தங்கல மாசு

கழன்று நாட்டுப்பற்றிலே நாட்டம் சென்றது. நாளடைவிற் பிரிக்கமுடியாத பெருநட்புடன் சவர்க்கார் கொள்கையிலே தாவிச்சென்றூர்.

சவர்க்கார் வடநாட்டில் 'நாசிக்'கில் தோன்றியவர். மராட்டியர்; ஆங்கிலத்திலும், மராட்டி மொழியிலும் புலவர்; கவிஞர்; உணர்ச்சியூட்டும் விறுவிறுப்பான பேச்சாளர்; நாட்டுப் பற்றிலே அழுந்தியவர்; இந்து மதக் கொள்கைக்காக உயிரையும் விடக்கூடியவர். அவர் அங்கே பாரிஸ்டருக்குப் படித்துக்கொண்டிருந்தார்.

இந்திய விடுதியில் சவர்க்காரேயன்றி வேறு பலரும் நாட்டுப்பற்றுடைய புரட்சி இளைஞர்களாக இருந்தனர். அவர்களிற் சிறந்தோர் டாக்டர் சௌந்தரராஜனும், விபின சந்திர பாலர் மகனுர் நிரஞ்சன பாலரும் ஆவர். டாக்டர் ராஜன் மருத்துவக்கலை பயிலவே அங்கு வந்திருந்தார்.

## ௫. புரட்சிக்கனல்

சொற்பொழிவு

இந்திய விடுதி வாழ்வினரில், சவர்க்கார் 'இந்திய உரிமைப்போர்' என்ற நூலொன்றை மராட்டியில் எழுதியிருந்தார். ஐயர் அவருடன் சேர்ந்து அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். அந்நூலில் ஒவ்வொரு வரியும் 'புரட்சி! புரட்சி!' என்று துடிக்கும். அந்நூலைப் படிப்பதும் வைத்திருப்பதும் அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்ட செயல். எனினும், தென்னுடெங்கும் எவ்வாறோ பரவி இளைஞருள்ளத்திலே புரட்சித் தீயை வளர்த்துவந்தது. மேலும் ஐயரால் கரிபால்டி வரலாறும் அவ்வப்போது லண்டனில் நடக்கும் இந்திய விடுதி நிகழ்ச்சிகளும் புதுவையிற் பாரதியார் நடத்திய 'இந்தியா' என்ற பத்திரிகையில் வெளியாயின. டாக்டர் ராஜன் இராணி இலக்குமிபாய் வரலாற்றை எழுதினுர்.

விநாயக சவர்க்காரும் ஐயரும் சேர்ந்து இந்திய விடுதியில் இருக்கும் மாணவர்கட்கு நாட்டுப்பற்றை யூட்டிப் புரட்சிக்கனலிலே குளிக்கத் தூண்டினர். கரிபால்டி, மாஜினி ஆகிய இரு புரட்சிவீரர்களின் வரலாறுகள் இந்திய விடுதி வீரர்களுக்குப் பாடமாயின. அவர்கள் சென்ற நெறியிலேயே தாங்களும் சென்று பலாத்கார முறையிலே நாட்டை மீட்கவேண்டுமென உறுதி செய்தனர்.

வாரத்திற் கொருநாள் வாரக்கூட்டம் நடைபெறும். இந்திய விடுதியில் முப்பது நாற்பது இளைஞர்கள் கூடுவார்கள். சவர்க்காரும், ஐயரும் உணர்ச்சிவெறி ததும்பும் சொற்பொழிவிலே மாணவர்களை முழுக்கு

வார்கள். புயலாக, வெள்ளமாக, அனல் கொப்புளிக்கும் அவர்கள் பேச்சிலே இளைஞர்கள் ஈடுபட்டனர். "இந்தியர்களாகிய நம் உடம்பிலே ஓடுவது இந்திய இரத்தமே. நமக்கு இந்தியா அடிமை நாடாக இருப்பது மிகப் பேரிழிவாகும். இந்திய அன்னையை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து, உரிமை பெற்று, அரியணையில் வீற்றிருக்குமாறு செய்யவேண்டுவது இந்திய மகனின் கடமை. அதற்கு வழி கரிபால்டி, மாஜினி போன்ற வீரர்கள் காட்டிய புரட்சி வழியேதான். எழுவோம்! இந்திய ருள்ளத்திலே புரட்சி விதையைத் தூவுவோம்!" என்று வஞ்சினம் பேசித் தோள்தட்டினர். உள்ளத்தினிலே புரட்சி முரசு கொட்டினர். அவர்கள் செய்ய விரும்பிய புரட்சியோ படையேந்திப் போர்புரிந்து நாட்டை மீட்கும் புரட்சி. இந்தியப் பொய்கையில் ஒரு மூலையில் விழுந்த அந்தப் புரட்சிக்கனல் பல இடங்களிலும் விழுந்திருந்தால் பொய்கையெங்கும் புரட்சியலை பொங்கியிருக்கும். திருநெல்வேலியிலும், புதுவையிலும், வங்கத்திலும், இங்கிலாந்தில் இந்திய விடுதியிலும்மட்டும் விழுந்தாற் போதுமா? ஒற்றுமையில்லாத இந்தியாவிலே ஓண்ட வந்து ஊர்ப்பிடாரியான வெள்ளையனை விரட்ட எங்கும் புரட்சியலை வீசாததாலேதான் அவர்களுடைய முயற்சி விரும்பிய விளைவை உண்டுபண்ணவில்லை.

### படைக்கலப் பயிற்சி

இந்தியவிடுதியிலே வாய்ப்பேச்சு மட்டும் நடைபெறவில்லை. புரட்சி வீரர்களின் படங்கள் மிளிரும். அங்கே புரட்சி வீரர்களின் நாட்கள் கொண்டாடப்பெற்றன. இந்தியவிடுதி இளைஞர்கள் இங்கிலாந்திற்கு வரும் இந்தியத்தலைவர்களிடஞ் சென்று வாது செய்து

தங்கள் புரட்சிக்கு ஆதரவு தேட முயன்றனர். மறை வாகத் துப்பாக்கி முதலிய படைக்கலப் பயிற்சிகளும் பயின்றுவந்தனர்; போர்நூலும் பயின்றனர்; மற்போர் பழகினர்.

படைக்கலப்பயிற்சி செய்துகொள்ள எவ்வளவோ இடுக்கண்கள் நேர்ந்தன. இந்தியா அடிமை நாடாகை யால் இவர்களுக்குத் துப்பாக்கி வைத்துக்கொள்ளும் உரிமை யில்லை. இங்கிலாந்து உரிமைபெற்ற நாடாகை யால், அங்குள்ள மக்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி செய்துகொள்ள உரிமை யிருந்தது. இந்தியவிடுதியி லுள்ள மாணவர்கள் துப்பாக்கிப்பயிற்சிபெற முயன்ற னர். சவர்க்காரும் ஐயரும் இந்திய விடுதியின் அண்மை யிலுள்ள பயிற்சிக் கழகம் ஒன்றிலே சேர விண்ணப்பித் துக்கொண்டனர். கிடைக்கவில்லை, இந்தியரென்ற கார ணத்தால். பின்னர், குறிவைத்துச் சுடும் பந்தயக் கூடங்களில் மிகுதியான பொருட்செலவிலே பழகி னார்கள்.

டாக்டர்-ராஜன் இந்திய விடுதிக்கு அருகிலிருந்த அதே பயிற்சிக் கழகத்தில் ஐயருக்கும் சவர்க்காருக்கும் இடங் கிடைக்கவில்லை யென்றறிந்தும் முயன்று பார்ப்ப தாக அவர்களிடங் கூறிச் சென்றார். இடங் கிடைத் தது. உறுப்பினர் கட்டணத்தைக் கட்டினார். மகிழ் வுடன் ஒரு மணிநேரம் சுடப் பழகினார். இந்திய விடு திக்கு வந்து நண்பர்களாகிய அவ்விருவரிடமுங் கூறினார். ஐயர், 'தங்கள் நல்லூழ்' என்றாராம். 'எவ்வளவு நீடிக்குமோ?' என்றாராம் சவர்க்கார். அவ்வாறே மூன் றும் நாள் ஒரே ஒருநாள் சுடப்பழகியதற்குரிய கட்டணம் போக மற்றைய பணமும் உறுப்பினராக இருக்கமுடியா

தென்ற கடிதமுங் கிடைத்தன. டாக்டர் ராஜன் மனம் வருந்தியது. எனினும், முயற்சியை விடாமல் லண்டனில் ஏழைகள் கைத்தொழிற் பயிற்சிபெறும் ஒரு பல் கலைக் கழகத்திற் சேர்ந்தார். அக்கழகத்தில் எல்லாத் தொழிலுங் கற்பிக்கின்றனர். சமையல் வேலை, சலவை வேலை முதலாகப் புகைப்படம் பிடித்தல் போன்ற பல வகைத் தொழில்களுங் கற்பிக்கின்றனர். படம் பிடிக்கக் கற்றுக்கொள்ள டாக்டர் ராஜன் சேர்ந்தார். பிறகு, துப்பாக்கிப் பயிற்சியிலும் சேர இடம்பெற்ருர். படம் பிடிக்கப் பயிலும் மாணவராக இருக்கும் உரிமையால் அப்பயிற்சி கிடைத்தது. அங்குப் பயிலும் மாணவருக்குக் கட்டணம் மிகவும் குறைவு. ஆர்வத்துடன் டாக்டர் ராஜன் துப்பாக்கி சுடப் பழகினுர்.

எங்ஙனமிருக்கிறது இவர்கள் துப்பாக்கிப் பயிற்சியின் நிலை? நாட்டுப்பற்றென்றே காரணமாக இவர்கள் இத்தகைய இடுக்கண்களில் ஈடுபட்டனரே அன்றி வேறு எதனைக் கூறுவது?

இங்ஙனம் படைக்கலப் பயிற்சி மட்டும் செய்தாற் போதுமா? படையை நடத்துந் திறமை வேண்டாமா? அதற்கும் முயற்சி நடந்தது. அக்காலத்தில் மொராக்கோவிலுள்ள மூர் வகுப்பினருக்கும் ஸ்பெயின் நாட்டினருக்கும் போர் நடந்து கொண்டிருந்தது. அப்படையிலே கலந்து பயிற்சிபெற மூவரை ‘ இந்திய விடுதி ’ செலுத்தியது. மூவருக்கும் வேண்டிய செலவுக்குப் பொருள் கொடுத்தது. துப்பாக்கியும், உடை முதலியனவும் வாங்கிக் கொடுத்தது. மிகவும் சிக்கனமாக வாழ்வை நடத்தியும் நன்கொடை பெற்றும் பொருளீட்டியே இத்தகைய செலவுகளைச் செய்து வந்தது. இம்முயற்சியிலே

சவர்க்காருக்கும், ஐயருக்கும் உள்ள பங்கு மிகவும் பெரிது. ஆறு திங்கள் வரையிற் சென்ற மூவருடைய வரலாறு சிறிதும் தெரியவில்லை. ஏழாந் திங்களில் இருவர் திரும்பினர். ஓட்டியுலர்ந்த மெய்யும் உறுதியிழந்த உள்ளமுமாக வந்தனர். அவர்களுடைய தளர்ந்த நடையையும் வாடிய முகத்தையுங் கண்டு இந்திய விடுதி கலங்கியது. இவர்களை இருதிறப் படையும் விரும்பவில்லை. ஒற்றர்களென்று நினைத்து ஓட்டிவிட்டனராம். சென்றவர்கள் கொண்டுவந்த செய்தி இதுதான். இம் மூவரையும் அனுப்பிய முயற்சியில் முந்நூறு பவுன் செலவானதாம்! அடிமைநாட்டு மக்களின் உரிமை முயற்சி எவ்வாறு சிதறுகிறதென்று பாருங்கள்!

### கள்ளனிலுங் குள்ளன்

இந்திய விடுதியில் நடக்கும் கூட்டங்களுக்கும் இருபது முப்பது பேர்களே வருவார்கள். இந்தியவிடுதியில் இருப்போரும் எழுவரோ எண்மரோ ஆவர். காரணம் என்ன? அங்குள்ள கட்டுப்பாடும் சிக்கனமாக வாழ்வு நடத்த வேண்டுமென்ற ஒழுங்குமே காரணமாகும். லண்டனிற் படிக்க வரும் இந்தியமாணவர்களிற் பெரும்பாலோர் செல்வரின் பிள்ளைகள்; பணச்செலவைப் பாராத பண்பினர். ஆகவே, கட்டுப்பாடும், சிக்கன வாழ்வுமுடைய இந்திய விடுதியிற் சிலரே இருக்க நேர்ந்தது. அங்கு உண்ணும் பொழுதும், உறங்குவதற்குச் செல்லும் பொழுதும் ஓய்வின்றி இந்தியாவின் விடுதலையைப் பற்றிய பேச்சே நிகழும். விடுதியிலுள்ள பொருள்கள் ஒழுங்காக வைக்கப் பெறுமலும் சுத்தம் செய்யப் படாமலும் இருக்கும். ஆகவே, சிக்கனமாக வாழும் இந்திய விடுதியிலும் ஓர் ஆங்கிலச் சிறுமியை வேலைக்கு அமர்த்தினர். எனினும், எண்ணிக்கை மிகவில்லை.

கோடைக்காலம் வந்தது. ஒரு புதியவர் இந்திய விடுதியை நாடி வந்தார். அவருக்குத் தெரிந்தவர் அவ் விடுதியில் யாரும் இல்லை. தெரிந்தவரிடமிருந்து அறிமுகமும் கொண்டு வரவில்லை. மூட்டை முடிச்சுகளுடன் வந்த அவர் சவர்க்கார் யாரென்று கேட்டு அறிந்து மராட்டியில் ஏதோ உரையாடினார். சவர்க்கார் அவரை இந்திய விடுதியில் இருக்க ஏற்பாடு செய்தார்.

வந்தவர் தம் பெயர் கீர்த்திகரென்றும் சவர்க்காரின் ஊராகிய நாசிக்கைச் சார்ந்தவரென்றும் கூறினார். பம்பாய் கோர்ட்டுகளில் மொழி பெயர்ப்பாளராக இருப்பவராம்; ஐந்தாறு மொழிகளில் வல்லவராம். பல் மருத்துவம் பயிலவே வந்தாராம். ஓராண்டு வரையில் இருப்பதாகக் கூறினார். அவர் இந்திய விடுதியின் ஒழுங்கு முறைகளை மீருமல் இருந்தார். இந்திய உரிமைச் சங்கத்திலும் சேர்ந்துகொண்டு தவருமற் கூட்டங்களுக்கு வந்தார். திங்களொன்றுக்கு ஒரு பவுன் நன்கொடை நல்கினார். ஆகவே, இந்திய விடுதியிலே அவருக்குப் பாராட்டுதல் கிடைத்தது. வேலைக்காரியும் அவரிடம் தனிப்பட்ட உரிமையுடன் பணிபுரிந்தாள்.

கீர்த்திகர் வந்து சில திங்கள் கழிவதற்குள் அவருக்கும் வேலைக்காரிக்கும் காதல் முளைத்தது. அழகும் முகவெட்டும் இளமையும் கனிந்த அவளை முப்பது வயதே நிரம்பிய மராத்திகரான கீர்த்திகர் விரும்பியது இயற்கைதான். எனினும், சங்க ஒழுங்கும் புறக்கணிக்கப்பட்டதுடன், வேலைக்காரியின் வேலையும் ஒழுங்காக நடைபெறவில்லை. ஆகவே, ஐயரும் சவர்க்காரும் சிந்தித்து வேலைக்காரியை நிறுத்திவிட்டனர். அதனால், வேலைக்காரியோ கீர்த்திகரோ சிறிதும் கவலையுறவில்லை. வேலைக்காரியைக் கீர்த்திகர் அத்தெருவிலேயே சில வீடுகட்கப்பால்

குடியமர்த்தினர். வெளிப்படையாகவே, அவளுடன் பொழுது போக்கிக் காதலியாகவும் வைத்துக்கொண்டார். எனினும், இந்திய விடுதியையும் இந்திய உரிமைச் சங்கத்தையும் விடாமல் ஒழுங்காகவே இருந்து வந்தார். ஆனால், ஊர் சுற்றும் பணி மிகுந்து, பயிலும் வழக்கம் அடியுடன் இல்லாமலே போய்விட்டதுபோல் இருந்தது.

ஐயர் சவர்க்காரிடம் கீர்த்திகரைப் பற்றிக் கூறினர். 'செல்வமுடைய இளைஞர்கள் லண்டனில் இருக்கும் நிலையிதுதானே' என்று சவர்க்கார் ஆதரவு கூறினர்.

இந்திய விடுதியாளர்களாகிய இவர்களை, 'ஸ்காட்லந்து யார்டு' போலீசார் விடாமற் கண்காணித்து வருவது வழக்கம். ஆனால், அப் போலீசார் கீர்த்திகரை மட்டும் தொடர்வதில்லை. இது ஐயருக்கும் டாக்டருக்கும் ஐயத்தை விளைத்தது. டாக்டர் உடனே சென்று, பல் மருத்துவச் சாலையிலே கீர்த்திகரைப் பற்றி ஆராய்ந்தார். வந்தவுடனே இரண்டொரு வாரங்கள் கீர்த்திகர் பள்ளிக்கு வந்தார் என்றும், இப்போது வருவதே இல்லை யென்றும் அறிந்தார். ஐயம் உறுதிப்பட்டது.

ஒருநாள் இரவு கீர்த்திகர் தம் காதலியுடன் நாடகம் பார்க்கச் சென்றார். அவர் வர நேரமாகும் என்று டாக்டரும் ஐயரும் அறிந்துகொண்டு, அவருடைய அறையை மறு சாவி போட்டுத் திறந்து, பெட்டி முதலியவற்றை ஆராய்ந்தனர். பெட்டியிலிருந்து, இந்திய உரிமைச் சங்கத்தின் அவ்வாரத்திய நடவடிக்கைக் குறிப்பொன்று இருந்தது. அது 'ஸ்காட்லண்டு யார்டு' போலீசாருக்கு எழுதிய உளவு கடிதமாகவே காணப்பட்டது. அதை மட்டும் எடுத்துக்கொண்டு கதவைப் பூட்டிக்கொண்டு இருவரும் வெளியே வந்தனர். ஒற்றர் என்போர் மாறு

வேடங்களில் மறைந்திருந்து மறைவான செய்தியை அறிவோர். லண்டன் போலீஸார் ஐயரும் சவர்க்காரும் புரட்சிக்காரர்கள் என்று அறிவர். ஆகவே, அவர்களைக் கண்காணித்து நிகழ்ச்சிகளை அறிவிக்கக் கீர்த்திகரை அமர்த்தியிருந்தனர். போலீஸாரின் ஒற்றன் ஒருவனுக்கு இடங்கொடுத்தோமே என்ற எண்ணம் ஐயரையும் டாக்டரையும் குழப்பியது. சவர்க்காரிடம் காட்டினர். சவர்க்கார் திடுக்கிட்டார். மூவரும் ஆராய்ந்தனர். கீர்த்திகரை வெளியேற்றினால் வேறொரு புதிய ஒற்றன் வருவான். அவனை ஒற்றனென்று அறியமுடியாமற் போயினும் போகும். ஆகவே, கீர்த்திகரை இந்திய விடுதியிலேயே போலீஸாரின் உளவாளியாகவே இருத்துதல் வேண்டும். கீர்த்திகரைத் தம் வயப்படுத்தி அவர் அனுப்பும் ஒவ்வொரு கடிதத்தையும் தணிக்கை செய்தே அனுப்பச் செய்தல் வேண்டும்—இவ்வாறு முடிவு செய்தனர்.

கீர்த்திகர் நாடகம் முடிந்தவுடன் வந்தார். தம் அறையைத் திறந்து அமர்ந்தார். சிறிது பொறுத்து, ஐயர் அவரறைக்குட் புகுந்தார். அவருடைய சட்டைப் பையில் ஒரு கைத்துப்பாக்கி யிருந்தது. மற்றொரு பையில் கீர்த்திகரின் உளவுக் கடிதம் இருந்தது.

ஐயர் கீர்த்திகருடன் கொஞ்ச நேரம் நாடகத்தைப் பற்றி உரையாடினார். பிறகு, ஊர்வம்பளந்தார். உரையின் இடையே போலீஸாருக்குச் சிலர் உளவாளிகளாக இருந்து தாய்நாட்டுக்குத் தீமை புரியும் இழிவைத் தேடிக்கொள்வதைப் பழித்துக் கூறினார். இறுதியிற் கீர்த்திகர் உளவாளி வேலை செய்வதைச் சுட்டிக் குறை கூறினார். கீர்த்திகர் தாம் அவ்வாறு உளவாளியாக இல்லையென்றும், லண்டனில் இனிய பொழுது போக்குக்காகவே வந்திருப்பதாயும் வம்பளந்தார். நயத்தினால், உண்மை

கூறுத கீர்த்திகரை அச்சுறுத்தியே உண்மையறிய உறுதி கொண்டார் ஐயர்.

ஆகவே, அறையின் கதவை உட்புறத்திலே தாழிட்டார். டாக்டர் அறைக்கு வெளியிலே நின்றுகொண்டு எவ்வாறு முடியுமோ என்று கவலையுடன் காத்திருந்தார். ஐயரோ, சிறிதும் அஞ்சாமலே, சட்டைப்பையிலிருந்த கைத்துப்பாக்கியைக் கீர்த்திகரின் மார்பிலே அழுத்தியவாறு, "இந்தத் துப்பாக்கியில் ஆறு ரவைகள் உள்ளன. உண்மையை ஒப்புக்கொள்ளாவிட்டால் உன் வாழ்வு இன்னே மாய்ந்துவிடும். இக்கடிதம் உன்னுடைய பெட்டியிலிருந்து கிடைத்தது. இதிலிருக்கும் எழுத்து உன் எழுத்தென்று நன்ருய் நானறிவேன் என்பதும் உனக்குத் தெரிந்ததே!" என்று இடியென முழங்கிஞர்.

கீர்த்திகர் அச்சமுற்ருர். ஐயரின் காலைப் பிடித்துக் கொண்டார். "நான் சவர்க்காரை நன்ருய் அறிவேன். ஆகையால், என்னை இங்கு அனுப்பிஞர்கள் போலீஸார்கள். சவர்க்கார் இந்திய உரிமைச் சங்கம் நடத்துவதையும் நாசிக்கில் புரட்சி இயக்கம் வலிமை பெற்றிருப்பதையுங் கண்டு, எனக்கு ஓராண்டு விடுமுறை கொடுத்துச் சவர்க்காரை உளவறியும்படி விடுத்தனர். இனி நான் நீங்கள் கூறியவாறு நடப்பேன்," என்ருர்.

ஐயர், "நன்று! இனியும் நீ உளவாளியாகவே இங்கேயே இருத்தல்வேண்டும். நாங்கள் கொடுக்கும் அறிக்கையையே நீ போலீஸாருக்கு அனுப்பவேண்டும்," என்று உறுதிமொழி கொடுக்குமாறு வினவிஞர். ஒற்றஞக வந்த கீர்த்திகர் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். நன்கொடையையும் ஒரு பவுனிலிருந்து மூன்று

பவுன்களாக உயர்த்திக் கொடுத்தார். மேலும் இவ்வகை ஏற்பாட்டுக்கு ஒப்பாவிட்டால் ஒற்றுவேலை போய்விடும் என்பதை நன்குணர்ந்துகொண்டு ஐயரால் தணிக்கை செய்யப்பெறும் உளவுக் கடிதத்தையே போலீஸாருக்குக் கொடுத்துவந்தார். கள்ளனுக்குக் குள்ளனாக இருக்கும் திறமறிந்த ஐயரின் சூழ்ச்சித் திறனை என்னென்பது!

சில திங்கள் இவ்வாறு கழிந்தன.

ஒருநாள் மாலை இருபது வயது மதிப்பிடக்கூடிய இளைஞர் ஒருவர் இந்திய விடுதிக்கு வந்தார். அவர் முகத்தில் அறிவொளி வீசியது. கையில் ஒரு பெட்டியிருந்தது. சோர்ந்து மெலிந்த மெய்யுடன் துவண்டு நின்றார். டாக்டரும் ஐயரும் அவரை யாரென வினவினர். "இந்தியாவிலிருந்து மூன்றாம் வகுப்பில் கப்பற்பயணம் செய்துவந்ததால் இவ்வாறு சோர்ந்துவிட்டேன். என் பெயர் திருமலாச்சாரி. திருவல்லிக்கேணி என் சொந்தவூர். நாட்டு விடுதலைக்காக உழைப்பதில் நாட்டங் கொண்டுள்ளேன். சியாம்ஜி கிருட்டின வர்மா நாட்டுவிடுதலைக்காக உழைப்பவர்க்கென நிதி ஒன்று சேமித்து வைத்திருப்பதாக அறிந்து வந்திருக்கிறேன். எவ்வேலை கொடுப்பினும் இனிதே செய்வேன். ஆதரிக்க வேண்டும்," என்றார் அவர்.

சென்னையில் அக்காலத்தில் வெளியாகி வந்த இந்தியா என்னும் வார இதழில் லண்டனில் ஐயருடைய கூட்டாளிகள் நாட்டு விடுதலைக்காகப் பாடுபடுவதை உணர்ந்து, நம் கடனையும் உடனிருந்தாற்றுவோம் என அவ்விளைஞர் வந்து சேர்ந்துவிட்டார். ஆனால், அங்குள்ள இளைஞர்கள் தாம் நடத்தும் விடுதலைப் பணிக்குத் தம் பொருளையும் செலவிட்டுக் கொண்டிருப்பதைத் திருமலை

அறியவில்லை. ஆகவே, நாட்டுப்பற்றுடைய அவரை எவ்வாறு ஓம்புவதென ஐயர் முதலானோர் சிந்தித்தனர்.

பிறகு, இந்திய விடுதியில் உள்ளவர்களுக்குச் சமையல் செய்யவும், கடைக்குச் சென்று வரவும், சங்க உறுப்பினர்க்கு வேண்டிய பணி புரியவும் அவரை ஏற்பாடு செய்தனர். அவருக்கு நேரும் செலவை இந்திய விடுதியினர் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், புதியவராக வந்த அவர் கீர்த்திகரைப் போலவே ஒற்றராக இருப்பாரோ என்ற ஐயமும் ஐயர்க்குண்டாகியது. ஆகையால், திருமலைக்குத் தெரியாமலே திருமலையின் நடவடிக்கைகளை ஆராய்ந்தனர். இரண்டு திங்கள் வரையில் ஆராய்ந்ததில் அவர் தூய நாட்டுப்பற்றுடைய இளைஞரென இனிதுணர்ந்தனர்.

அவ்வாறு திருமலையைப் புடமிட்டறிந்த பிறகு, ஐயருக்கு மற்றோரெண்ணம் உண்டாயிற்று. திருமலைக்காக அவர்கள் ஒவ்வொருவரும் இப்போது பொருள் செலவழிக்கவேண்டி இருக்கிறது. அவருக்கு வருவாய்க்கு வழியொன்று செய்தால் அத்தொல்லை நீங்கும். ஏற்கெனவே சிக்கனத்துடன் வாழ்க்கை நடத்திச் சங்கத்தையோம்பும் அவர்கட்கு அவ்வாறு செய்வது சாலவும் நலமாகும். ஆகவே, திருமலைக்கு வேலை தேட முயன்றார். அவ்வேலை என்ன?

கீர்த்திகர் ஒற்றராக இருக்கிறார். அவருடைய ஒற்றுவேலைக்குப் போலீசார் திரண்ட பொருளைச் செலவழிக்கின்றனர். ஆகவே, கீர்த்திகரின் ஒற்றை மற்றோர் ஒற்றனால் ஒற்றித் தெரிந்துகொள்ள அவர்கள் விரும்பலாம். அந்த ஒற்றன் தன் வேலையை நன்றாகச் செய்தால் கீர்த்திகரின் நிலை வெளிப்பட்டுப்போம். அவ்வாறு

வெளிப்படாமல் இருக்க, மற்ருேர் ஒற்றனும் இந்திய உரிமைச் சங்கத்தாரின் தணிக்கை பெறும் ஒற்றனுக இருப்பதே சாலவும் நலந்தருவதாகும்.

இத்தகைய எண்ணம் ஐயரின் சூழ்ச்சிமிக்க உள்ளத்திலே ஊன்றியது. எனவே, திருமலையை ஒற்றுவேலை செய்ய ஒப்புக்கொள்ளப் பணித்தார். திருமலையும் மனமுவந்து ஏற்றுக்கொண்டார். 'ஸ்காட்லண்டு யார்டு போலீஸ்' தலைவரைப் போய்ப் பார்த்தார். இந்தியவிடுதியில் நடக்கும் நடவடிக்கைகளையெல்லாம் விடாமல் அறிவிப்பதாகவும், ஆறு திங்கள் கழித்து வேலை நன்ருக இருந்தால் ஊதியத்தை இரண்டு பங்காக ஆக்கவேண்டுமென்றும், இப்போது திங்களொன்றுக்கு ஐந்து பவுன் கொடுத்தாற் போதும் என்றும் புகன்ருர். 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' என்று எண்ணிஞர் போலீஸ் தலைவர். வாரம் ஒருமுறை தம்மைக்கண்டு இந்திய விடுதி நிகழ்ச்சிகளைக் கூறவேண்டும் என்றும், அச்சிட்ட துண்டறிக்கைகள், கடிதங்கள் முதலியவற்றைக் கொண்டுவந்து தரல்வேண்டும் என்றும் தலைவர் சாற்றினர். ஓம் என ஒப்பிக்கொண்டு வந்தார் திருமலை.

இந்த ஏற்பாட்டினுல், திருமலைக்கு ஊதியமும், சங்கத்திற்கு உறுதியான அரணும் கிடைத்தன. திருமலைக்குக் கிடைக்கும் ஊதியத்தில் அவருக்குரிய செலவிற்குப் போக மிகுதியானது சங்கத்திற்கு உதவியது. ஐயர்க்கு இந்த ஒற்றர் இருவருக்கும் வேண்டிய உளவைச் சேர்த்துக்கொடுக்கும் வேலையும் நேர்ந்தது. போலீஸார் தங்களால் ஆராயப்படும் சங்கத்தார் கொடுக்கும் நிகழ்ச்சிகளையே அறிய முடிந்தது. இவ்வாறு, இந்திய உரிமைச் சங்கம் லண்டன் போலீஸார் கண்ணில் மண்ணைத் தூவித்

தன் வேலையை அச்சமின்றிச் செய்துவந்தது. பம்பாயில் அதன் கிளை ஏற்பட்டது. துப்பாக்கிகளும் ரவைகளும் மறைவாக லண்டனிலிருந்து பம்பாய்க்கு வந்துசேர்ந்தன.

### தலைவர்களின் சந்திப்பு

இந்திய விடுதியில் அடிக்கடி சொற்பொழிவுகள் நடத்தியதுடன், லண்டனுக்கு வரும் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து, அவர்களுடைய ஆதரவையும் பெற முயன்றார் ஐயர். வரலாற்று ஆசிரியரான இராமச்சந்திர தத்தர், விபினசந்திர பாலர், லாலாஜி முதலியோரைச் சந்தித்தார். அவர்கள் ஐயருடைய நாட்டுப்பற்றைப் பாராட்டினர்.

*1908*-இல் கோபால கிருஷ்ண கோகலே லண்டன் பாராளுமன்றத்தின் 'லிபரல்' கட்சி முன்னர் இந்திய நிலைமையைப் பற்றிப் பேச வந்திருந்தார். அவர் மித வாதக் கொள்கையுடையவர். நாட்டுப்பற்றிற் சிறந்தவர். ஆகவே, அவரைக் காண விரும்பினார் ஐயர். இந்திய விடுதியில் அப்போது இந்திய உரிமைப் போரின் ஐம்பதாம் ஆண்டு விழா நடந்தது. அதற்கு வருமாறு கோகலேக்கு அழைப்பு அனுப்பினார் ஐயர். கோகலே வரவில்லை. விழா முடிந்த பிறகு, டாக்டரையும் சவர்க்காரையும் அழைத்துக்கொண்டு கோகலே தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். இவர்கள் வருவதை முன்னரே கோகலேக்குத் தெரிவித்திருந்தனர். ஆகவே, கோகலே இவர்களை அன்புடன் வரவேற்றார். ஐயர் கையில் உண்டிப்பெட்டி ஒன்று இருந்தது. அதன்மேல், "*1857*-இல் நாட்டுப்பற்றினால் உயிரிழந்த வீரர்க்கு," என்றெழுதியிருந்தது. கோகலேயின் முன் அப்பெட்டியை

ஐயர் வைத்தார். கோகலே அவர்களை இருக்கச்செய்து, அவர்கள் வந்த நோக்கத்தை வினவினுர்.

ஐயரே அவருடன் உரையாடினுர்.

'நாங்கள் 1857-ஆம் ஆண்டில் நாட்டுப்பற்றுக் கனலில் உயிர்விட்ட வீரர்களுக்குப் பொருள் திரட்டுகிறேம். தங்கள் உதவியும் வேண்டும்.'

கோகலே அப்போது திலகரால் அமைக்கப்பெற்ற பெர்கூஸன் கல்லூரியிலே ஆசிரியராக இருந்தார். அக் கல்லூரி ஆசிரியர்கள் கல்வித் தொண்டு செய்யும் ஒரே நோக்கத்துடன் திங்கள் ஒன்றுக்கு எழுபது ரூபா ஊதியத்துடன் இருபதாண்டு வேலை செய்ய ஒப்பந்தம் பெற்றவர்கள். கோகலேயின் பொருளாதார அறிவும் வரலாற்று உணர்ச்சியும் அவரை இந்திய சட்டசபையில் உறுப்பினராக்கியது. ஆசிரிய ஊதியம் ஒன்றே அவருக்கு வருவாய். ஆகையால், அவர் செல்வநிலையில் இல்லை. எனவே, அவர் தம்மால் ஒரு செப்புக்காசும் கொடுக்க முடியாதென்று கூறிவிட்டார்.

" தாங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள் ?"

" இந்திய நிலையை லிபரல் கட்சிமுன் எடுத்துக் கூறுவேன்."

" இவ்வாறு எடுத்துக்கூறினுல் மட்டும் வெள்ளையன் உள்ளம் இரங்குமென எதிர்பார்ப்பது வீண். உரிமை வேண்டுவோன் தன் கையாலேயே உரிமையைப் பெற வேண்டும்........" என்று மேலுங் கூறத் தொடங்கினுர் ஐயர். கோகலே அவரை இடைமறித்து, "நான் வரலாறு உணர்ந்துள்ளேன். உங்களைவிட நம் நாட்டின் நிலையையும், எதிரியின் நிலையையும் நன்கு அறிவேன்.

படையாற்றலும் ஒற்றுமை யாற்றலும் நமக்கு இல்லை. மேலும், நம் உடம்பில் பல்லாண்டுகளாக அடிமை இரத்தம் ஊறிக்கிடக்கிறது. எனவே, மெல்ல மெல்ல நம் முயற்சியைக்கொண்டு செல்லவேண்டும். 'எறும்பூரக் கல்லுந் தேயும்,' 'துள்ளும் மாடு பொதி சுமக்காது' எனவே, "காலங்கருதி யிருந்தாலன்றி ஞாலங் கை வராது," என்று தம் கொள்கையை விளக்கிவிட்டார். சென்ற மூவரும் திகைப்புடன் திரும்பினர். ஐயர், 'இத்தகைய மிதவாதிகளால் நாட்டு விடுதலை கிடைப்பதரிது' என்று முணுமுணுத்தார்.

### உண்மையுருவைக் கண்டார்

1908-இல் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலே வழக்கறிஞராக (பாரிஸ்டராக) இருந்தார். அவர் லண்டனிற் பாராளுமன்றில் தென்னாப்பிரிக்காவிலே இந்தியர் படுந்துன்பத்தை எடுத்துரைக்க வந்திருந்தார். இந்தியர்கள் அங்கு அடிமை வாழ்வு நடத்துவதும் விலங்கினும் இழிவாக வெள்ளையரால் மதிக்கப்படுவதும் அடிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவர் இந்தியர் நிலையை லண்டன் அவையிலே விளக்கி நலம்பெற வந்திருந்தார். அக்காலத்திலே அடிகளின் அறப்போரின் ஆற்றலை எவரும் அறியார். பகைவரையும் அருளுடன் நோக்குதல் வேண்டும் என்ற தூய எண்ணமும் உண்மை வழியிலே நடத்தல் வேண்டுமென்ற உறுதியும் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன என்பதை அறிந்தாலும் அதனாற் பகைவரிடமிருந்து நாட்டைப் பெற முடியுமென்று ஒருவரும் நம்பவில்லை.

அந்த ஆண்டிலே தீபாவளிப் பண்டிகை வந்தது. லண்டனில் உள்ள இந்தியர்கள் ஏறக்குறைய எழுநூறு

பேர். அவர்களை யெல்லாம் ஒன்றுகூட்டி விருந்தொன்று வைத்து, நாட்டுப்பற்றைத் தூண்டும் ஒரு சொற்பொழிவை நிகழ்த்த விரும்பினர் ஐயர். விருந்திற் கலந்துகொள்வோர் பங்குப்பணம் பரிந்தளித்தல் வேண்டும். ஏறக்குறைய நூற்றுவர் சேர்ந்தனர். இவ் விருந்திற் கலந்துகொண்டு கூட்டத்திற்குத் தலைமை வகிக்கத் தக்கவராக ஒரு பெரியாரைத் தேடித் திரிந்தார் ஐயர். இந்தியாவின் நிலையை எடுத்துக்கூற அங்கு வந்திருந்த பல தலைவர்களும், 'இந்திய விடுதியா? வர இயலவில்லையே!' என்று தட்டிவிட்டனர். நாட்டின் நிலையை எடுத்துக்கூறி வெள்ளையரின் உள்ளத்தை இணங்க வைக்க வந்திருந்த அவர்கள் இந்தப் புரட்சிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தால் வந்த நோக்கம் பாழ்படும் என்று எண்ணினர் போலும். ஐயர் சோர்வடையாமற் காந்தியாரைத் தேடிச் சென்றார்.

அங்கு வந்திருந்த இந்தியத் தலைவர்கள், 'இரக்கப் போனாலுஞ் சிறக்கப் போ' என்றவாறு, ஆடம்பரக் கொண்டல்களாகப் பெரிய உயர்ந்த விடுதிகளிலே தங்கியிருந்தனர். அங்கெல்லாம் அடிகளைத் தேடினார் ஐயர்; காணவில்லை! இறுதியில், வண்டியும் புகமுடியாத சிறு சந்தொன்றில், எளிய இந்தியச் சிற்றுண்டி விடுதியிலே கண்டார். சில பழைய நாற்காலிகள், கிழிந்த சமுக்காளம், அதன்மேற் படுக்கை—இவற்றுடன் ஆங்கில உடைதரித்து அமர்ந்திருந்தார் அடிகள். ஐயர் அந்நிலை கண்டு வியப்படைந்தார். 'தலைவரொருவர் தங்கும் இடமா இது!' என எண்ணினார். அடிகளுடைய புன்னகை தவழும் முகமும், அருள் கனிந்த கண்களும் ஐயரைக் கவர்ந்தன. அன்புடன் அடிகள் ஐயரை வரவேற்றார்.

தென்னுப்பிரிக்காவில் அடிகள் நடத்திய அறப் போரைப் பற்றிச் சிறிதுபோது இருவரும் உரையாடினர். 'சாத்வீக' எதிர்ப்பிலே அடிகளுக்கிருந்த அசையாத நம்பிக்கையைக் கண்டு தளர்ச்சி அடைந்தார் ஐயர். அடிகளுடைய எளிய இனிய பொருள் நிறைந்த பேச்சைக் கேட்டு, "இந்த வழியில் நாம் விடுதலை பெற முடியாதே. சிவாஜி கரிபால்டிகளைப் போலப் படையும் படைக்கருவியுங் கொண்டே எதிர்த்தல் வேண்டும்" என்று தம் கருத்தைத் தெளிவாகச் சொன்னுர் ஐயர்.

அடிகள் புன்னகை புரிந்தார். "உலகில் எப்போதும் உண்மையே பெரியது; ஆற்றலுடையது! உண்மையே கடவுள்! கடவுளுக்கு மேம்பட்டது எதுவுமில்லை. உண்மையே வெற்றிபெறும். ஆகவே, நம் உண்மையான நோக்கத்தை அறப்போரால் (சாத்வீகப் போரால்) அடையமுடியும். உண்மையும் அருளும் (அறமும்) ஒன்றே" என்று அப்போதே கூறிவிட்டார்.

ஐயருக்குக், 'கத்தியின்றி ரத்தமின்றி'ச் செய்யும் அந்த அருட் போரிலே சிறிதும் நம்பிக்கையே உண்டாகவில்லை. எனினும், அடிகளிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தார். அன்று, தலைமையேற்கக் கூப்பிடவில்லை. மறுநாள் சவர்க்காரை அழைத்துச் சென்றுர். அப்போதும் அடிகள் தம் அருள்நெறியையே வற்புறுத்தினர். சிலநாட்கள் தொடர்ந்து சென்று உரையாடினர். அந்நாட்களில் இருதிறத்தார்க்கும் நடந்த உரையாடல் 'இந்து சுயராச்சியம்' என்ற நூலில் உள்ளது.

சவர்க்காரும் ஐயருமாகக் காந்தியடிகளைத் தீபாவளி விழாவிற்குத் தலைமை ஏற்குமாறு வேண்டினர். அடிகள் கூட்டத்தின் நோக்கத்தை வினவினுர்.

"இந்திய இளைஞர்கட்கு இந்திய உணர்ச்சி தருவதே நோக்கம்."

"நன்று. இந்திய உணர்ச்சியூட்டும் அவ்விழாவில் நடக்கும் உணவும் இந்திய உணவாகத்தான் இருத்தல் வேண்டும். அதுவும் அருளுணர்வுடன் கூடிய (மரக்கறி) உணவாக இருத்தல் வேண்டும். அவ்வுணவை நீங்களே சமைத்தல் வேண்டும்."

இருவரும் வியந்தனர்.

"கடுமையான ஒப்பந்தம். எனினும், ஒப்புக்கொள்கிறோம்."

அன்புடன் விடைபெற்றனர் இருவரும்.

அடுத்த சனிக்கிழமை மாலையில் விருந்து நடத்தல் வேண்டும். அங்குமிங்கும் அலைந்து இந்தியப் பொருள்களாகச் சேர்த்தனர் இருவரும். விருந்திற்கு முதல் நாள் ஐயர் அடிகளிடம் சென்று, "இந்திய முறைப்படி யாவும் சமைக்கப்படும்," என்று விளக்கிக் கூறிவிட்டு வந்தார்.

சனிக்கிழமை பகல் ஒரு மணிக்கே விருந்துச் சமையல் தொடங்கியது. டாக்டர் ராஜனுட்பட அறுவர் சமையற்கட்டில் இருந்தனர். சமையல் தெரிந்தவர்போக மற்றவர்கள் கறிகாய் நறுக்கவும், தண்ணீர் கொண்டு வரவும், சமையற் கலங்களைத் தேய்க்கவும் ஆகிய அலுவல்களில் ஈடுபட்டனர். ஐயரும் சவர்க்காரும் கூட்டத்திற்கு வேண்டிய வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

சமையல் வேலை தொடங்கிய பொழுதே மெலிந்த யாக்கையும் எளிய தோற்றமுமாக ஒருவர் வந்தார். அவர் தாமும் இந்தியரெனவும் சமையற் பணியிலே சேர்த்துக் கொள்ளும்படியுங் கேட்டுக் கொண்டார். டாக்டர்

ராஜன் இவர் யாரோ ஓர் ஏழை இந்தியரென மதித்து வேலைசெய்ய இடங் கொடுத்தார். மேலும், முரட்டு வேலைகளிலும் ஈடுபடுத்தினர். வந்த இந்தியர் சிறிதும் சோர்வின்றிப் பம்பரம் போல அங்குமிங்கும் ஓடியாடிச் சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் இனிது செய்தார். அவருடைய திறமையைக் கண்டு வேலைகளெல்லாம் அவரையே புகலடைந்தன.

மாலை ஆறு மணிக்கு ஐயர் சமையல் வேலை எப்படி இருக்கிறதென்று பார்க்க வந்தார். அங்கே டாக்டர் ஒருவரைப் பணிபுரியக் கட்டளையிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தார்; திடுக்கிட்டார்!

"என்ன ராஜம்! இவரை யார் வேலைசெய்யச் சொன்னர்கள்? இவரே நம் தலைவர் மோகனதாஸ் காந்தி!"

எல்லோரும் திடுக்கிட்டனர்; நடுக்கத்துடன் திகைத்தனர். ஐயரும் டாக்டரும் அடிகளிடஞ் சென்று மன்னிப்புக் கேட்டனர். "ஐயா! மன்னிக்க வேண்டும். தெரியாமற் பிழை செய்து விட்டோம்! தங்களை இன்னரென அறியோம்," என்றனர்.

அடிகள் நகைத்தார்.

"நானன்றே மன்னிப்புக் கேட்டல் வேண்டும்! லண்டனில் இந்திய உணவு சமைப்பதன் தொல்லையை நான் அறிவேன். எனினும், இளைஞர்களாகிய உங்களை இவ்வுணவைச் சமைக்கக் கூறிவிட்டேன். உங்களுடைய ஊக்கத்தைக் கண்டு மகிழ்கிறேன். இப்பணியிலே நானும் பங்கெடுத்துக் கொள்வது தவருகுமா? பங்கெடுத்துக் கொள்வது என் கடமையன்றே?" என்றார்.

முகமலர்ச்சியுடன் அடிகள் கூறிய உரையைக் கேட்டதும் எல்லோருடைய மெய்யும் சிலிர்த்தன.

தற்பெருமையற்ற இனிய தூய உள்ளத்துடன் அப் பெரியார் மற்றவர்கள் எவ்வளவு தடுத்துங் கேளாமல் எல்லோருக்கும் தட்டுக்களை வைத்து உணவுகளைப் படைத்த பிறகு மற்றோருடன் தாமும் அமர்ந்துண்டார். இந்திய விடுதி இளைஞர்கள் மெய்ம்மறந்தனர். மோகன ருடைய முறுவலும் அருள் கனிந்த பேச்சுங் கலந்து, அன்றை உணவு இன்பங் கலந்திருந்தது. அத்தகைய உணவை அதுவரையில் இந்திய விடுதியில் அவர்கள் உண்டதே இல்லை. உள்ளத்தாற் பொய்யாதொழுகிய அடிகள் அங்குள்ள இளைஞர்களின் உள்ளத்துளெல்லாம் உளரானார்.

உண்டி முடிந்து, சிறிது இளைப்பாறிய பிறகு, கூட் டந் தொடங்கியது. தலைமையேற்ற காந்தியார், "நம் நாட்டு இளைஞர்களை ஒன்றாகக் காணும் வாய்ப்பளித்த தற்கு நன்றி. உங்கள் நாட்டுப்பற்றைப் போற்றுகிறேன். இந்தியத் தன்மையை நாம் எங்கிருந்தாலும் விடலாகாது. நாட்டு விடுதலை நோக்கத்தில் நானும் சவர்க்காரும் ஒற் றுமையாக இருப்பினும் அவருடைய நெறி எனக்கு வேறானது. நான் உண்மையான அறப்போரிலே அசைக்க முடியாத நம்பிக்கை யுடையேன். அதன் பலனைத் தென்னாப்பிரிக்காவிலே காண்கிறேன். இப் போது புரட்சிநெறியிலே செல்கிறவர்களும் இறுதி யில் அருள் நெறியில் வருவார்களென்று நம்புகிறேன்," என்று சுருக்கமுந் தெளிவுமாகச் சொற்பொழிவு செய்தார்.

பிறகு, சவர்க்கார் பேசினார். அதனைப் பேச்சென்பதைவிட இடிமுழக்கம் என்பது பொருந்தும். "புரட்சி நெறியிற் படையேந்திப் பகைவரைப் பிளந்து விடுதலை பெறுதலே நடைபெறக் கூடியது. துறவிகளுக்குரிய அருள்நெறி அரசியலுக்குச் சிறிதும் ஏலாது. சிவாஜி, குரு கோவிந்தன், பிரதாப சிங்கர் முதலான வீரர்களைப் போல் போர்க்களத்திலே துப்பாக்கியும் குண்டுமாகத் தான் புகுதல் வேண்டும்," என்று முழங்கினார். உணர்ச்சியும் படபடப்பும் பொருந்திய சவர்க்காரின் பேச்சிலே அடிகளும் திரும்பி விடுவாரென்று ஐயரும் பிறரும் எண்ணி விட்டனர். எனினும், அடிகள் மாறவில்லை. அடிகள் அப்போது பேச்சு வன்மையிலராக இருப்பினும், உள்ள உறுதியுடையவராகவே இருந்தார். அவர் சவர்க்காருடைய நாட்டுப் பற்றைப் பாராட்டினர். பிறகு வெளியான 'யங் இந்தியா' இதழில், 'உண்மையும் விடா முயற்சியும் உள்ள ஒத்துழையாதார்' என்று ஐயரையும் பாராட்டியுள்ளார். பிற்காலத்தில் ஐயர் அடிகளின் நெறியைப் போற்றிப் புகழ்ந்தார். அதுவே, விடுதலைக்குரிய நெறியென்றும் உணர்ந்தார்.

## இந்திய விடுதி கலைந்தது

கீர்த்திகரும், திருமலையும் கொடுத்து வரும் உளவுகள் வர வரப் போலீஸாருக்குப் பிடிக்கவில்லை. நாட்டுப் பற்றைக் குறிக்கும் நிகழ்ச்சிகள் கிடைத்தனவே ஒழிய, சவர்க்காரைக் குற்றஞ் சாட்டும்படியான உளவுகள் ஒன்றுங் கிடைக்கவில்லை. கீர்த்திகர் தம் காதல் விளையாட்டால் உடலெல்லாம் நோயாகி மருத்துவ நிலையத்திற் படுத்துவிட்டார். ஆகவே, போலீஸார் வேறு ஒற்றர்களை—நம்பிக்கையானவர்களை—அமர்த்தினர். இவ்

வாறு ஒற்றர் முற்றுகை மிகவே ஐயர், டாக்டர், சவர்க்கார்—ஆகியோரைத் தவிர மற்றோரெல்லோரும் பிரிந்து போயினர்.

அவ்வாறு பிரிந்துபோன இளைஞர்களில், 'மதனலால் டிங்கரா' என்பவர் ஒருவர். அவர் பொறிக்கலை பயில லண்டனுக்கு வந்திருந்தார். சவர்க்காரும், ஐயரும் ஆற்றிய நாட்டுப்பற்று வேள்வியிலே அவரும் ஈடுபட்டார். அவர், "வாய்ப்பேச்சாற் பயனில்லை. செயலிற் காட்ட வேண்டும். செயலாற்ற இடுக்கண்களைப் பொறுக்குந் திறம் வேண்டும்," என்பார். ஒருமுறை அவர் தம் உள்ளங்கையை மேசையின்மேல் வைத்துக்கொண்டு ஊசியை ஏற்றச் சொன்னார். ஐயரே அவ்வேலையைச் செய்தார். ஊசி சிறிது சிறிதாக உள்ளங்கையிற் பாய்ந்து மேசையினும் உருவியது. பிறகு மெதுவாக ஊசியை எடுத்துவிட்டார். கையில் ரத்தம் பீறிட்டது. எனினும், டிங்கராவின் முகம் சுருங்கவில்லை. உடல் துடிக்கவில்லை. அன்றலர்ந்த தாமரையெனப் புன்முறுவலுடன் இருந்தார். மற்றெவரும் அத்துணைப் பொறுமை காட்டவில்லை. அவ்விளைஞரை 'விளையும் பயிர்' எனப் புகழ்ந்தனர். அவரும் தனியிடஞ் சென்று பொறிக்கலையிற் புகுந்தார்.

சவர்க்காரின் உடல்நிலை சீர்ப்படப் பாரிஸ் நகரை நாடினார். அங்கே, காமா அம்மையார் அன்னையினும் பன்மடங்கு அன்புடன் அவரைப் பேணினார். டாக்டர் ராஜன் வைத்தியக் கல்லூரியிலேயே தங்கிப் படிப்பிலே கருத்தைச் செலுத்தினார். ஐயரும் தனியிடம் ஒன்றிலே தங்கிப் படித்தார். இவ்வாறு, இந்திய விடுதி கலைந்தது. திருமலை பாரிஸில் சவர்க்காருடன் தங்கியிருந்தார்.

டாக்டரும், சவர்க்காரும், ஐயரும் தங்கள் படிப்பில் தேர்ச்சிபெற்றனர். ஐயரோ தம் பாரிஸ்டர் பட்டத்தை அப்போதே துறந்து, சங்கத்தின் தொடர்பான சொற்பொழிவுகளில் இறங்கி லண்டனிலேயே இருந்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டம் வரப் பத்தாண்டுகளிருக்கும்போதே ஐயர் ஆங்கிலப் பட்டத்தைத் துறந்த நாட்டுப்பற்றை உன்னுக !

சில நாட்கள் வரையில் ஒன்றும் நடைபெறாமல், புயல் கிளம்புமுன் உண்டாகும் அமைதிபோல் இருந்தது. இந்திய விடுதியிலிருந்த பொருள்களெல்லாம் பாரிஸில் காமா அம்மையார் சார்பிலே சேர்ந்தன. சியாமாஜி கிருஷ்ண வர்மாவும் அந்த அம்மையாரும் பாரிசுக்கு வந்த வீர இளைஞர்கட்குப் புகலிடந் தந்து ஆதரவு செய்துவந்தனர். அந்த அம்மையாருக்கு அப்போது ஐம்பது வயதிருக்கும். குழந்தைகள் இல்லை. லண்டனிற் படித்துவரும் இந்திய மாணவர்களையே மக்களாகப் பாவித்து அன்புடன் ஆதரித்துவந்தார். சவர்க்காரிடமும் ஐயரிடமும் அளவிலா அன்புடையவர். பொதுக் கூட்டங்களுக்குப் போய்ப் பேசுவது உண்டு. அப்போது, தம் மடியிலிருந்து பட்டுத்துணியாலான தேசீய மூந்நிறக் கொடியை எடுத்து எதிரில் ஒரு மெல்லிய குழாயிற் பொருத்திப் பறக்கவிட்டபிறகே பேசுவார். ஆகவே, அவ்வம்மையாரைக் கொடிதாங்கி அம்மையார் என்றும் இயம்புவது வழக்கம்.

### மதன்லால் டிங்ரா

1909-இல் லண்டனில் இரு கொலைகள் அரசியல் நோக்குடன் நடந்தன. சர். கன்ஸன் வைலி என்பவர் ஐ. சி. எஸ். பட்டம் பெற்று இந்திய சமஸ்தானங்களில்

வேலை பார்த்தவர். கொலை நடந்த ஆண்டில் இந்திய அமைச்சருக்கு இந்திய அரசியல் செயலாளராக இருந்தார். இந்தியாவைப் பற்றிய நுணுக்கமான செய்திகளையெல்லாம் நன்றாகக் கூறுவார். ஆகவே, அவர்மேல் மதன்லால் டிங்ரா கண்வைத்திருந்தார். இவர் இந்திய விடுதியில் ஐயருடனும் சவர்க்காருடனும் பழகினவரென்பதை முன்னரே அறிவோம். லண்டனில் ஜிஹாங்கீர் ஹாலில் ஒரு விருந்து நடந்தது. அந்த விருந்துக்கு மதன்லால் டிங்ராவும் 'கன்ஸன் வைலி'யும் சென்றிருந்தனர். டிங்ரா அவனுடன் நட்புமுறையில் உரையாடிக் கொண்டே முற்றத்தில் உலாவிக்கொண்டிருந்தவர் ஆள் அயர்ப்பு நோக்கிச் சட்டைப் பையிலிருந்த கைத் துப்பாக்கியாற் சுட்டுவிட்டார். லால்காகா என்ற பார்ஸி கனவான் ஒருவர் தடுக்க ஓடிவந்தார். அவர்மேலும் ஒரு குண்டு பாய்ந்தது. இருவரும் அங்கேயே இறந்தனர். டிங்ரா போலீசாரிடம் தாமே தம்மை ஒப்புக் கொடுத்தார்.

போலீசார் அவருடைய அறையைத் துழாவினர். துணிமணிகளைத் தவிர வேறொன்றுங் கிடைக்கவில்லை. இந்திய விடுதியை ஆராய்ந்தனர். குப்பை கூளங்களே கிடைத்தன. டிங்ராவே தம் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அவர் கூறியது :

"எனக்குக் கன்ஸன் வைலிமேல் தனிப்பட்ட பகைமையேதும் இல்லை. ஆங்கிலேயர் இந்தியாவை அடக்குமுறையாற் கொடுமைப் படுத்துகின்றனர். மக்களை அடிமைகளாக நடத்துகின்றனர். அவர்களைப் பழி தீர்க்கவே இவ்வாறு செய்தேன். என் நாட்டின் விடுத

லைக்கு இம்முறைதான் சரியான வழியென்பது என் எண்ணம். இச்செயலுக்கு நானே பொறுப்பாளி. யாரும் என்னைத் தூண்டவில்லை."

டிங்ராவுக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தது. முகமலர்ச்சியுடன் ஏற்றார். 'நாட்டிற்காக உயிர்விடும் பேறு பெற்றேன்,' என்று மகிழ்ந்தார்.

லண்டன் மக்கள் டிங்ராவை மறக்கவில்லை. ஐயரும் மூக்கின்மேல் விரலைவைத்தார். பலரைத் திடுக்கிடச்செய்த இச்சம்பவம் போலீசாரைத் தூண்டி விட்டது.

### ஜாக்ஸன் கொலை—சவர்க்கார் சிறை

அப்போதே, இந்தியாவில் நாசிக்கில் ஜாக்ஸன் கொலை நடந்தது. அக்கொலைக்கு விநாயக சவர்க்காரே துப்பாக்கி அனுப்பினார் என்று ஒரு நடவடிக்கை போலீசாரால் எடுக்கப்பட்டது. விசாரணை புரிய அவரை இந்தியாவிற்குக் கொண்டுவர 'வாரண்டு' ஒன்று பிறந்தது. இவ்வாறு 'வாரண்டு' பிறந்தது ஐயருக்கோ, சவர்க்காருக்கோ தெரியாது.

அப்போது ஐயர் லண்டனில் இருந்தார். டாக்டர் ராஜனும் அங்கேதான் இருந்தார். சவர்க்கார் பாரிஸில் இருந்தார். அவரை லண்டனுக்கு வருமாறு ஐயர் தந்தி ஒன்று அனுப்பினார். சங்க நடவடிக்கை பற்றிப் பேசவேண்டி இருந்தது. ஆகையால், சவர்க்காரும் பாரிஸிலிருந்து லண்டனுக்கு வந்தார். பாரிஸில் இருக்கும் போது, அது வெளிநாடாகையால் அவரைச் சிறைப்படுத்த முடியாது. எனினும், போலீசார் அவரை மறைமுகமாகவே கண்காணித்து வந்தனர். எனவே, லண்டன் வருவதற்காக டோவர் துறைமுகத்திற் கால்வைத்

தவுடன் சவர்க்கார் சிறைப்பட்டார். ஐயர் திடுக்கிட்டார்.

சவர்க்கார் லண்டனிலே இரு திங்கள் வரையிற் சிறையிலிருக்க நேர்ந்தது. இந்தியாவிலிருந்து ஜாக்ஸன் கொலைசார்பான 'ரிகார்டு'கள் வர அவ்வளவு காலம் சென்றது. பிறகு, விசாரணைக்காக இந்தியாவிற்குக் கொண்டுவரவும் தீர்ப்புச் செய்யப்பட்டது.

சவர்க்கார் சிறையிலிருக்கும்போது ஐயர் சென்று பார்த்துவருவது வழக்கம். முதல்முறை சவர்க்காருக்கு நேர்ந்த நிலையை நினைத்து ஐயர் இரங்கினார். சவர்க்கார் தேறுதல் கூறி, "நடந்ததை நினையாமல் நடக்கவேண்டியதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்," என உறுதி கூறினார். பிறகு, ஒவ்வொரு முறையும் சந்திக்கும்போதெல்லாம் ஒரு திட்டத்தை இருவரும் வகுத்துக்கொண்டனர்.

### விடுதலை முயற்சி

சவர்க்காரை இந்தியாவிற்குக் கொண்டுவருவதற்குள் அவரை மீட்கவேண்டுமென்பதுதான் அவர்கள் திட்டம். ஆகவே, இந்தியாவிற்குக் கொண்டுவரச் சில நாட்கள் இருக்கும்போதே ஐயர் பாரிஸிற்குப் புறப்பட்டார். ஐயர் லண்டனில் அப்போது ஓர் உணவு விடுதியில் தங்கியிருந்தார். தாடியும் வளர்த்துவந்தார். இந்திய விடுதியில் இருக்கும்போது உச்சிக்குடுமி வைத்திருந்தார். சவர்க்காரைச் சிறைப்படுத்தியதும் ஐயரையும் சிறைப்படுத்தப் போலீசார் தேடினர். ஆனால், உச்சிக்குடுமி ஆளாகத் தேடினரே ஒழியத் தாடிக்காரரைத் தேடவில்லை. ஆகவே, ஐயர் சிறைப்படவில்லை.

பாரிஸிற்குப் புறப்பட்ட ஐயர் சட்டையும், முண்டாசுமாக அகாலியர்போற் புறப்பட்டார். கண்ணாடி

அணிந்தவராக ஒரு கைப்பெட்டியுடன் புகைவண்டி ஏறித் துறைமுகஞ்சென்று கப்பலேறினர். கப்பலிற் செல்லும்போது ஒரு போலீஸ்காரன் அவர் முன் தோன் றினன். ஐயர் பெட்டியின் மேல் வி. வி. எஸ். (V. V. S) என்றிருந்ததே அதற்குக் காரணம். தம்மைப் போலீசார் தேடுகிறார்களென்றறிந்திருந்ததால் ஐயர் ஒரு இந்துஸ் தானி நூலொன்றை வைத்துப் படித்துக்கொண்டிருந் தார். போலீஸ்காரன் தயங்காமல், "நண்பர் வி. வி. எஸ். ஐயரே! உமக்கொரு தந்தி," என்று ஒரு வாரண்டை நீட்டினன்.

ஐயர் உண்மையுணர்ந்தார். எனினும், கலங்காமல், 'இந்தத் தந்தி வி. வி. எஸ். ஐயருக்குத்தானே. என் பெயர் 'வே. விக்கிரமசிங்கு' என்று இந்துஸ்தானியிலே விடையளித்தார். வந்த சார்ஜண்டு மருண்டுவிட்டான். 'தென்னிந்திய அந்தணர் குடுமி வைத்திருப்பார்கள்; இவர் தாடி மீசைகளுடன் அகாலிபோலக் காணப்படு கிறன். இந்துஸ்தானியும் படிக்கிறன்,' என்று எண்ணி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சென்றன். பிறகே, ஐயர் தெளிவடைந்தார். மற்றோர் ஒற்றனையும் ஏமாற்றிவிட் டுப் பாரிஸ் சேர்ந்தார். அங்கே நண்பர்கள் காத்திருந்து அழைத்துச் சென்றனர்.

ஐயர் காமா அம்மையாரின் வீட்டை அடைந்தார். அங்கு அம்மையாரிடம் தம் நோக்கத்தை அறிவித்தார். அம்மையாரும் உடன்பட்டார்.

லண்டனிலிருந்து சவர்க்காரை விசாரணைக் கைதி யாகக் கொண்டுவந்த கப்பல் ஒருவாரங் கழித்து, பிரெஞ் சுத் தென் துறைமுகமான 'மார் செயில்சு'க்கு வந்து சேர்ந்தது. கப்பல் அங்கு விடியற்காலம் வந்துசேர்ந்தது.

கப்பல் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருந்தது. சவர்க்கார் தம்மைச் சிறைப்படுத்திக் காத்துவரும் போலீஸாரிடம் காலைக்கடன் முடிக்கவேண்டுமென்று கூறினார். அவர்கள் அவரைக் கப்பலிலுள்ள மலங்கழிக்கும் அறையொன்றில் விட்டுவிட்டு வெளியே காத்திருந்தனர்.

உள்ளே நுழைந்த சவர்க்கார் மலங்கழிக்கக் கப்பலில் அமைத்துள்ள பொந்தின் வழியாகக் கடலிற் குதிக்க முயன்றார். உடையுடன் நுழையமுடியவில்லை. எனவே, உடைகளைக் கழற்றிவிட்டுக் கோவணத்துடன் நுழைந்தார். மெலிந்த மெய்யினரான அவருக்கு அஃது எளிதாகவே இருந்தது. கடலிற் குதித்து நீந்திக் கரையை நோக்கி விரைந்து சென்றார்.

காவல் காத்து நின்ற போலீஸ்காரர்கள், "இன்னும் அங்கே என்ன செய்கிறாய்? எவ்வளவு நேரம்," என்று கூவினர். பேச்சரவமில்லை! கதவைத் தட்டிப் பார்த்தனர். ஏனென்றுங் கேட்கவில்லை. இதற்குள் மேல்தளத்தில் இருந்தோர் சவர்க்கார் நீந்திச் செல்வதைப் பார்த்து, "அதோ ஒருவன் ஆடையொன்றும் இன்றி நீந்திச்செல்கிற அழகைப் பாருங்கள்," என்று கூவி ஆரவாரஞ் செய்தனர். போலீஸார் ஓடிப் பார்த்தனர். தாங்கள் கொண்டு போகும் கைதி என்று நன்றாய் அறிந்துகொண்டனர். உடனே நீரிற் குதித்து நீந்திச் சென்றனர். சவர்க்காருக்குத் தப்பிச்செல்லும் ஆவல் விரைவுபடுத்தியது. போலீஸ்காரரை, அவர்கள் கைதியை விட்டதனாற் கிடைக்கக்கூடிய தண்டனை விரைவுபடுத்தியது.

இருசாராரும் விரைந்து நீந்தினர். நீச்சுப்போட்டி முடிந்தது. சவர்க்கார் கரையேறி ஓடினார். போலீஸாரும் விரைந்து கரையேறித் துரத்தினர். ஓட்டப் போட்

டியிலும் சவர்க்காரே வென்றுவிடுவார் போலிருந்தது. இன்னும் கால் கல் தொலைவு ஓடியிருந்தால் ஐயரும் காமாவும் சவர்க்காருக்காகக் கொண்டுவந்திருக்கும் 'மோட்டார் காரி'ல் ஏறித் தப்பித்திருக்கலாம் கோவணத்துடன் ஒருவர் ஓடிவருவதையும் போலீஸார் இருவர் துரத்துவதையும் கண்டான் பிரெஞ்சுப் போலீஸ்காரன். துரத்திச் சென்றவர்களும், "திருடன்! திருடன்! பிடிபிடி!" என்று கூவினர். ஆகவே, அந்தப் போலீஸ்காரன் பிடித்துக்கொண்டான் சவர்க்காரை.

தொலைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த காமாவும், ஐயரும் ஓடிவந்தனர். "இது பிரஞ்சு எல்லை! இவரை அந்தப் போலீஸாரிடம் கொடுப்பது சட்டத்திற்கு முரண்பட்டதாகும்," என்று தடுத்தனர். பிரஞ்சுப் போலீஸ்காரன் இவர்கள் கூற்றை மதிக்கவில்லை வந்த போலீஸ்காரர்கள், "இவன் எங்கள் கைதி! எங்களிடம் ஒப்படையுங்கள்," என்று வேண்டினர். அவ்வாறே அவனும் ஒப்புவித்தான். போலீஸார் சவர்க்காரைத் தூக்கிச் சென்றுவிட்டனர். ஐயரின் உள்ளமும், காமா அம்மையாரின் உள்ளமுந் துடித்தன! 'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை!'

உயிரை இழப்பதுபோலச் சவர்க்காரை இழந்து சென்ற ஐயர், பாரிஸ் செய்தித்தாள்களிற் கிளர்ச்சி செய்தார். 'பிரஞ்சு எல்லையை மிதித்த கைதியை ஆங்கிலேயரிடந் தருவது சட்டப்படி ஒழுங்காகாது,' என்று குடியரசுத் தலைவருக்கு எழுதினர் முடியரசுத் தலைவர் ஆங்கில அரசாங்கத்தை வினவினர். ஆங்கில அரசாங்கம் ஹேக் கமிட்டிக்கு இதை விசாரிக்கும்படி விடுவோம் என்றது. ஹேக் கமிட்டி ஆராய்ந்தது 'ஒப்படைத்தது ஒழுங்கே'

என்று தீர்ப்பளித்தது. இவ்வாறு முடிந்தது சவர்க் காரை மீட்கும் முயற்சி!

### சவர்க்கார் - அந்தமான் கைதி

சவர்க்காரை இந்தியாவிற்குக் கொண்டுவந்து விசாரணை செய்தது ஆங்கில அரசாங்கம். அவர்களுக்கு இரண்டு சான்றுகள் பெரு முயற்சியின்மேற் கிடைத்தன.

முதல் சான்று இராமராவ் என்பவரின் சாட்சியம். இராமராவ் என்பவர் ரங்கூன் நகராண்மைக் கழகத்தில் 'சுகாதார இன்ஸ்பெக்டர்' வேலை பார்த்தவர். உயர்படிப்புக்காக லண்டன் வந்தார். டாக்டர் ராஜன் அவரை ரங்கூனில் அறிவார். ஆகையால், அவரால் ஐயருக்கு அறிமுகம் ஆகி, இந்திய விடுதியிற் சேர்ந்து உரிமைச் சங்கத்திலும் உறுப்பினரானார். ஓராண்டு படித்துத் தேர்ந்து இந்தியா திரும்பினார். அப்போது ஐயர் பாரிஸில் இருந்ததால், அங்குச்சென்று விடைபெற்றுப் புறப்பட்டார். ஐயர் அவர் பெட்டியின் அடிப்பாகத்திலே சில கைத்துப்பாக்கிகளை வைத்துத் தம் நண்பர்களிடம் பம்பாயில் கொடுக்கும்படி கூறி விடுத்தார். பாரிஸ் நகரத்தில் இருந்த போலீஸ் உளவாளிகள் இதனை அறிந்து பின்தொடர்ந்தனர். இராமராவ் மார்செயில்ஸ் துறைமுகத்தில் மரக்கலமேறிப் பம்பாயில் வந்திறங்கினார்.

உளவாளிகளால் உணர்ந்திருந்த இந்திய அரசாங்க அலுவலாளர்கள் இராமராவ் பெட்டியைச் சோதனை செய்து கைத்துப்பாக்கிகளைக் கைப்பற்றினர். இராமராவை இரண்டாண்டுகள் கடுஞ் சிறையிலிருக்கத் தீர்ப்பளித்தனர். அரசாங்கத்தில் உயர்ந்த அலுவல் பெற

வந்த இராமராவ் சிறையிலிடப்பட்டதும் மனம் புழுங்கினர். அவர் பழகிய நாட்டுப்பற்று இருந்த இடம் தெரியாமற் பறந்தது.

சவர்க்காரை நாசிக் கொலை சம்பந்தமாக விசாரிக்கும்போது, அவர் பாரிஸிலிருந்தும் லண்டனிலிருந்தும் துப்பாக்கிகள் முதலியவை அனுப்பியதற்குச் சான்று தேடினர். ஜாக்ஸன் துரையைக் கொல்வதற்குச் சவர்க்கார் துப்பாக்கி அனுப்பியதாகவும் தாமே கொண்டுவந்ததாகவும் இராமராவ் கூறினால் விடுதலை அடையலாம் என்றனர். அந்தோ! இரங்கத்தக்கவரான — கோழையான — இராமராவ் அவ்வாறே சான்று கூறிவிட்டார். விடுதலையும் பெற்ருர். சவர்க்கார் அவரிடம் துப்பாக்கி கொடுக்கவேயில்லை.

மற்ருெரு சான்று :

லண்டனில் இந்திய விடுதியில் சவர்க்காரும், ஐயரும் இருக்கும்போது அரிச்சந்திர கோரே காவ்கர் என்ற ஒரு மராட்டியர் இருந்தார். அவர் சவர்க்காரின் உயிர்த் தோழர். குவாலியர் சமத்தானத்தில் உபகாரச் சம்பளம் பெற்று லண்டனில் இஞ்சினீயராகப் படித்துக்கொண்டிருந்தார். அவர் பேச்சுவன்மை மிக்கவர். சிவாஜியின் வரலாற்றை உருக்கமாகச் சித்திரிப்பார். அப்போது அவர் கண்களில் நீர் வழியும். தமக்குக் கிடைத்த உபகாரச் சம்பளமான இருபது பவுன்களிற் சிக்கனமான தம் செலவிற்குப்போக மிகுதியை 'உரிமை இந்தியா' இயக்கத்திற்குக் கொடுத்துவந்தார். கூட்டங்களில் உரிமை வேட்கை விளையும்படி சொற்பொழிவு ஆற்றுவார். அவர் இந்தியாவிற்குத் திரும்பிய பிறகுதான் சவர்க்கார் சிறைப்பட்டார்; இந்தியாவிலே சவர்க்காரை விசாரிக்கக்

கொண்டுவருவதற்கு முன் லண்டனில் நடந்த விசாரணையில் நூற்றிருபது பக்கங்கள் கொண்ட ஒரு பிரமாண வாக்குமூலம் இருந்தது. அது கோரே காவ்கர் கொடுத்தது!

அவ்வாக்கு மூலத்தின் மொழிப்பு :—

"லண்டனில் நான் இருக்கும்போது புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருந்தேன். நானும் என் தோழர்களும் எங்கள் நாடு உரிமை பெறவேண்டுமென அல்லும் பகலும் முயன்றோம். ஆனால், நான் இந்தியா வந்தபிறகு இங்குள்ள மக்கள் உரிமையாட்சிக்கு ஏற்றவரல்லர் என்ற முடிவுக்கு வந்தேன். இப்போது, சவர்க்காரும் அவர் தோழர்களும் லண்டனிற் செய்யும் முயற்சியால் இன்னும் பல என்போன்ற இளைஞர்கள் புரட்சி இயக்கத்தில் சிக்கிக் கொள்வார்களென்ற நினைவினால், அதனைத் தடுக்க நினைத்தே இந்த வாக்கு மூலங் கொடுக்கிறேன்."

இவ்வாறு தொடங்கி இந்திய விடுதியில் நடந்த எல்லா முயற்சிகளையும் சிறிதும் விடாமல் எழுதிக் கொடுத்துவிட்டார் போலீஸாருக்கு! ஐயரையும் சேர்த்தே அவர் தீட்டியிருந்தார்.

இந்த இருவரின் வாக்குமூலங்களே சவர்க்கார் ஜாக்ஸன் துரையைக் கொல்லச் சதி செய்தாரென்று கூற ஆதாரமாக இருந்தன. சவர்க்கார் ஆயுள்வரை அந்தமான் கைதி ஆனார்.

### வலைக்குத் தப்பிய கலைமான்

சவர்க்காரின் தீர்ப்புக்குப் பிறகு, ஐயர் பாரிஸ் நகரிலேயே ஓராண்டுவரை தங்கியிருந்தார். காமா அம்மை

யாரின் கனிவுமிக்க உள்ளம் அவருக்குப் புகலளித்தது. 'சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்து துஞ்சிடோம்,' என்று துணிவு மிக்க வீறுடன் எழுவோர்க்கு அந்நாளில் நேர்ந்த இடுக்கண்களை என்னென்பது! அரிச்சந்திர கோரே காவ்கர் போன்ற கோடரிக் காம்புகள் பல்லாயிரக்கணக்கில் உள்ள பாரத நாட்டிலே நாட்டுப் பற்றுக்குப் பற்றேது?

'பாரிஸ்டர்' பட்டம் பெற லண்டன் சென்ற வ. வே. சு. ஐயர், நாட்டுப் பற்றாலே தாக்கப்பெற்றுப் படித்துப் பெற்ற 'பாரிஸ்டர்' பட்டத்தையுங் கிழித்துக் குப்பையிற் போட்டுவிட்டுப் 'பாரிஸ்' நகரிலே பதுங்கிக் கிடந்தார்! 'அவர் பாரிஸ்டர் பட்டம் பெற்று வருவார், குடும்பத்தை வளனுறப் பேணுவார்,' என்று மனக் கோட்டை கட்டிக்கொண்டிருந்த மனைவியார் நிலையையோ, தம் அருமைச் செல்வியை—ஓராண்டு நிரம்பிய சீரார்ந்த பைங்கிளியை ஆக்கமுறச் செய்ய வேண்டிய பொறுப்பையோ எண்ணியிருந்தால், இந்த நாட்டுப் பற்றுக்கு இடமிருந்திராது. ஆனால், தந்நலந் துறந்த வீரர்களின் எண்ணத்திலே குடும்ப இன்பஞ் சுரக்க வழியேது!

உரிமை இந்திய இயக்கத்தின் ஒரு கொழுகொம்பான சவர்க்காருக்கு அந்தமான் வாழ்க்கை கிடைத்ததை எண்ணியெண்ணி ஏங்கிய ஐயர், தம்மை நாடி வீசப் பெற்றிருக்கும் ஆங்கில அரசாங்கத்தின் வலையை நாற்புறமும் நோக்கினர். வேற்று நாடாகிய பிரெஞ்சு நாட்டில் இருக்கும் வரையில் ஐயரை ஆங்கில அரசாங்கம் சிறைப் படுத்த முடியாதெனினும், எவ்வளவு நாட்கள் அங்கேயே இருக்கமுடியும்? மனைவியையும் மகவையும் பிரிந்த மனக்கலக்கம் புரட்சிக் காதலிலிருந்து மீண்ட

பிறகு ஐயரைப் புரட்டத் தொடங்கியது. எங்ஙனம் தம் அருமைக் காதலியையும், கனிமழலைச் சிறுமியையும் பார்க்க முடியும்? எங்கு நோக்கினும் ஆங்கில அரசாங் கத்தின் போலீஸ் பூனைகள் பாரிஸ் வளையைவிட்டு ஐயர் வெளியே வந்தாற் பற்றிக்கொள்ளும் பரபரப்புடன் உறங்காமல் நோக்கின.

லண்டனில் இந்திய விடுதியிலிருந்து வெளியே தங்கியபோது முகமாற்றத்திற்கென வளர்த்த தாடியே பாரிஸ்வரத் துணைபுரிந்தது. தாடியின் ஒத்துழைப்பு வேண்டற்பாலதென ஐயர் அதனை மிகவும் பேணி வளர்த்தார். ஓராண்டுக்குள் தாடியும் நீண்டது; முயற் சியும் நீண்டது. மகமதிய பக்கிரியாக வெளியேறவேண்டு மென்று திட்டமிட்டார். உருது படித்திருந்தாராகை யால், குரான் படித்தார். மகமதியர் தொழுகையில் ஓதும் மகமதிய மறையைப் பாடம் பண்ணினார். உடையணி யப் பழகினார். இந்த உருமாற்றம் மட்டுமன்று. பார்ஸி மகன் போலவும் நடை நொடி பாவனையெல்லாம் பழகி னார். காமா அம்மையார் வீட்டைச் சுற்றி வளையமிடும் உளவுக்காரர்களின் கண்ணிற் பொடி தூவிப் புறப்பட வேண்டும். தாம் பாரிஸில் இருப்பதாகவே எல்லோரும் நினைக்க வேண்டும் என்றெண்ணிப் பல கடிதங்களை எழுதிக் காலத்தை மட்டும் குறிப்பிடாமற் காமா அம் மையாரிடம் கொடுத்தார். அவற்றைத் தம் நண்பர்கட் கும் மனைவிக்கும் பல நாட்களுக்கொருமுறை காலத்தை மாற்றி மாற்றிக் குறிப்பிட்டு அனுப்பக் கேட்டுக்கொண் டார். அம்மையார் அப்பணியை அன்புடன் ஏற்றார்.

ஒருநாள் இரவு மூன்று மணிக்குப் பார்ஸி கனவான் போல உடை தரித்து, அம்மையார் அன்புடன் அளித்த வழிச் செலவுப் பொருளை 'நோட்டா'க இடையில் வரிந்து

கட்டிக்கொண்டு, கைப்பெட்டியில் உருமாற்றத்திற்கான உடைகளை வைத்துக்கொண்டு, கையில் ஒரு பிரம்பேந்தி மூடுவண்டி ஒன்றில் ஏறிப் புகைவண்டி நிலையம் புகுந்தார். உரோமாபுரியை நோக்கினார்.

மறுநாட்காலை உளவர்கள் கலைமான் வலையைக் கிழித்துக்கொண்டு ஓடிவிட்டதை உணர்ந்து பரபரத்தனர். போலீஸ் நிலையமெங்கும் தந்திகள் பறந்தன. அப்போது, ஐயர் பிரேஜிலுக்குப் போய்விட்டதாக அவர் மனைவிக்கு எழுதிய கடிதம் ஒன்று போலீஸார் கண்ணிற் பட்டது. போலீஸாரின் நாட்டம் பிரேஜிலை நோக்கியது. ஐயரோ ரோமை நோக்கிச் சென்றார்.

ரோமாபுரியின் பழமையான நாகரிகத்தைக் கண்டு மகிழ்ந்து, இத்தாலியில் உலாவி, கான்ஸ்தாந்திநோபிலைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் பார்ஸி உடையைக் களைந்து, மகமதியப் பக்கிரியாக மாறினார். மெக்காவுக்குச் செல்லுங் கப்பலில் ஏறினார். அப்போதும் உளவாளிகள் சிலர் கண்ணோட்டமிடுவதைக் கண்டு, 'அல்லாஹு அக்பர்', 'இலா இலாஹி இல்லல்லாஹு அலைஹு வஸல்லம்,' என மகமதிய மறைகளை ஓதியவாறு சிறிதும் அடையாளங் கண்டுபிடிக்க முடியாமல் நடந்துகொண்டார். பம்பாய் துறைமுகத்தில் இறங்கினார். அங்குச் சில நாட்கள் தலைமறைவாக இருந்தார். பிறகு, கொழும்புத் துறைமுகத்திலே பக்கிரியாகவே இறங்கினார். அங்கும் ஒருளவாளி இடமிருந்து 'அல்லாஹு அக்பர்,' எனும் மந்திரத்தின் மூலம் தப்பவேண்டியிருந்தது.

### புதுவை அடைதல்

இவ்வாறு இவர் மறைந்து திரிந்த காலத்திற் புதுச்சேரியில் அரவிந்தரும், கவிஞர் சுப்பிரமணிய பாரதியும்

இருந்தனர். மண்டயம் சீநிவாசாச்சாரியார் என்னும் பெரியார் அவர்களை ஆதரித்து வந்தார். ஆங்கில அரசாங்கத்தின் வலைக்குத் தப்பியே பாரதியும், அரவிந்தரும் புதுவையைப் புகலாகக் கொண்டனர். இங்குக் குறிப்பிட்ட மூவரும் ஐயரின் நண்பர்கள். அவர்களுக்கு ஐயர் வரும் நாள் தெரியும். ஆனால், உருமாற்றம் ஒன்றுந் தெரியாது. புதுவை துறைமுகத்தில் அவர்கள் ஐயரை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்; காணவில்லை. மனஞ் சோர்ந்து வீடு திரும்பினர்.

மண்டயம் சீநிவாசாச்சாரியார் வீட்டிற்கு முன் ஒரு மகமதியப் பக்கிரி வந்து நின்றார். ஆச்சாரியரைப் பார்க்க விரும்பினார். ஆச்சாரியார் வெளியே வந்தார். 'தாங்தே வந்தோ,' எனப் பக்கிரி வினவினார். குரலிலிருந்தும் வினவிய மொழியின் பொருளிலிருந்தும் ஐயரென உணர்ந்த ஆச்சாரியார் அன்புடன் தழுவி அழைத்துச் சென்றார். உள்ளே பாரதியார் இருந்தார். எல்லோரும் அடைந்த இன்பத்தை என்னென்பது! புரட்சித் தீயிற் குதித்துத் தப்பி வெளிவந்த நண்பரைக் கண்டு இன்பக் கண்ணீர் வடித்து விம்மிதமுற்றனர்.

---

## ௬. வாழ்க்கைச் சூழல்

### தந்தையும் தாயும்

திருமணமாகாத திருவினராவது, துறவியாவது தம் வாழ்க்கையை நீத்தால், அவருடன் நிற்கும் இல்லற நிலையில் உள்ள ஒருவருடைய 'தியாகம்' எல்லோருக்குந் துன்பமே தரும். இருமுது குரவரும் ஐயரின் 'பாரிஸ்டர்' படிப்பால் வளமிகு செல்வம் வாரிக் குவிக்கலாம் என்றெண்ணி இருந்தனர். பொருள்வருவாயிற் சிறந்த வழக்கறிஞர் தொழிலைப் பொன்னெனப் போற்றிட, உயர்ந்த கல்வி பெற்றுவருவான் ஊன்றுகோலாம் என உள்ளத்திலே உறுதி கொண்டிருந்தனர். 'நம்முடைய மணி நவமணியன்றோ? நம் வறுமையை இம்மெனு முன்னே இடர்ப்படுத்திவிடுவான்,' என எண்ணினர்.

### வாழ்க்கைத் துணைவி

"நம் கணவர் 'பாரிஸ்டர்' ஆகி வந்தவுடன் பிரிவுத் துயரும், வறுமைத் துயரும் பிரிந்துவிடும். நம்முடை பெயருக்கேற்றவாறு 'பாக்கியலட்சுமி'யாக இருக்கலாம். நம் செல்வத் திருமகள் செல்வத்தின் கொழுந்தாக இருப்பாள். இனிய வாழ்விலே இன்புறலாம்," என எண்ணினாள், தனிமையிலே தளரும் ஐயருடைய வாழ்க்கைத் துணைவி. அவள் அப்போது அத்தான் வீட்டிலிருந்து வாகநேரிக்கு வந்துவிட்டாள். 'ஓதற் பிரிவு ஒரு மூவாண்டு,' எனப் பண்டைத் தமிழிலக்கணம் சாற்றுவதைப் பாக்கியலட்சுமி அறியாளாயினும், மூன்றாண்டுகளும் மூன்று நாட்களாகப் போய்விடும் என்றெண்ணி வருங்காலப் பேற்றையெண்ணி மகிழ்ந்திருந்தாள்.

தந்தையை நன்றாக நினைவில் அமைக்கமுடியாத ஒரு வயது நிரம்பிய நிலையிற் பிரிந்த 'பட்டு' என்னும்

ஐயருடைய செல்வத் திருமகள் 'சீமை அப்பா'வை உள்ளத்திலே சித்திரித்துத் தனக்குத் தன் தந்தையாற் கிடைக்கவிருக்குந் தின்பண்டங்களையும், விளையாட்டுப் பொருள்களையும் மனக்கோட்டையிலே பேணிவந்தாள்.

1908 - மார்ச்சு வரையில் ஐயருடைய பாரிஸ்டர் கனவுடன் கூடிய அன்புக் கடிதங்கள் பாக்கியலட்சுமிக்குக் கிடைத்தன. அவற்றைப் படித்துப் படித்து மகிழ்ந்தாள் அப் பாவைநல்லாள்.

1908 - ஜூன் முதல் ஐயரிடமிருந்து வருங் கடிதங்களின் போக்குகள் மாறின. அவைகள் தன்னலத்தை ஒழிக்க வேண்டுமென்று சாற்றின. 'நாடே பெரிது, குறுகிய வீடு பெரிதன்று' என்றன. 'நாட்டுப் பற்றை வளர்க்கவேண்டும். நான் என் வாழ்வை நம் நாட்டுக்கே ஈடுபடுத்திவிட்டேன். வீர வாழ்வே மேலான வாழ்வென உறுதி செய்துவிட்டேன். நீங்களும் உங்கள் நோக்கத்தை நாட்டுப்பணியிலே செலுத்தல் வேண்டும்' எனச் சிறிது சிறிதாக மனக்கோட்டைகளை மாறுபடுத்தி நின்றன.

இவ்வாறு வரும் கடிதங்கள் பேதை மனத்தைப் பிழியத் தொடங்கின. அந்த மாறுதலை எண்ணவும் முடியவில்லை பாக்கியலட்சுமியால். மனத்தை அமைதி செய்துகொண்டாள். 'நம் இனிய மணாளர் இவ்வாறெல்லாம் எளிதிலே, நம்மைக் கைவிடுவாரா? ஒருபோதும் விடார்' என்று உறுதிப்படுத்திப் பார்த்தாள். செல்வச்சிறு மழலைக்கிளியான 'பட்டு'வுக்கும் ஐயர் 'வந்தேமாதரம்' சொல்லிப் பழகவேண்டுமென எழுதினார். அதனை அன்னை படித்தவுடன் சீமை அப்பா செப்பியவாறு செப்பத் தொடங்கினாள் அவள். கனவி

லும் நனவிலும் வந்தே மாதரமே அவளுக்குக் காட்சி அளித்தது.

நாள் செல்லச் செல்ல லண்டனில் 'இந்திய விடுதி' யைச் சூழ்ந்த ஒற்று, பாக்கியலட்சுமியின் இல்லத்தையும் வளைந்துகொண்டது. வீட்டில் நடைபெறுவதையெல்லாம் ஒன்றுவிடாமல் ஒன்றிக் கருத்துறக் கவனித்தனர் ஒற்றர்கள். ஐயரின் தந்தை அலறினர். 'ஐயோ! குடி கெட்டதே! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே! பாரிஸ்டர் படிக்கப்போன பையன் புரட்சியைப் படித்து விட்டானே! அமைதியாக இரண்டாம் பேருக்குத் தெரியாமல் இருந்த நம் குடியை அம்பலத்திலே இழுத்து விட்டானே. நாடாம்! பற்ரும்! வீரமாம்! நன்ருயிருக்கிறது நடத்தை! ஒற்றர் நம் வீட்டை முற்றுகையிடுவதா!' என்று கலங்கினர்.

பேர்த்தி தன் மழலை மொழியால், 'வந்தே மாதரம்' என வாய்நிறையச் சொல்வதைக் கேட்டதும் வரகநேரி ஐயர் மனங் குழம்பியது. அன்புடனும் அச்சத்துடனும், "அப்படிச் சொல்லாதே கண்ணே!" என்று கடிந்தார். பிறகு, அச்சுறுத்தினர். பாட்டனரின் மிரட்டலுக்குப் பயந்தாலும் சிறுமியின் உள்ளம் அதனைவிட மறுத்தது. எனவே, பாட்டனர் வீட்டிலில்லாதபோது, கூறிக் கும்மாளமிடுவாள் மழலைப் பெண். அவள் உள்ளமோ ஓயாது முணுமுணுத்து வந்தது. அவளுடைய பிடிவாதத்தை உணர்ந்த வேங்கடேசையர் வருவது வருக என்று கண்டிப்பதை விட்டுவிட்டார்.

லண்டனில் 'இந்திய விடுதி' இளைஞர்களின் செயல்கள் மேம்பட்டு வந்தன. அதனல், இந்தியாவில் 'வந்தே மாதரம்' கூறுவதும் தவருக முடிந்தது. அரசாங்கம்

அடக்குமுறையை மிகுதிப்படுத்தியது. வரகனேரியார் வருந்தினர். தம் பொருளை அரசாங்கம் பறிமுதல் செய்துவிடுமோ என்றும் ஏங்கினர்; சிந்தித்தார். வழக்கறிஞர்களை வினவினர். ஒரு முடிவுக்கு வந்தார். தம் மகனுக்கு ஒரு கடிதம் லண்டனுக்கு எழுதினர். "உன் போக்கு என் மனத்தை வாட்டுகிறது. அரசாங்கம் நம் சொத்தைப் பறிமுதல் செய்துவிட்டால் அப்புறம் செய்வதென்ன? ஆகையால், நீ உடனே, 'என் குடும்பத்தில் சொத்துரிமை எனக்கு வேண்டா' என எழுதி அனுப்பிவிடு," என அதில் எழுதியிருந்தார். அப்போதுதான் பாரிஸ்டர் பட்டத்தை வேண்டாவென ஐயர் திருப்பினர். அந்நிலையில் அருமைத் தந்தையாரின் விருப்பமும் உணர்ந்தார். வரும்படியை வாரியென வழங்கும் வழக்கறிஞர் பதவியை உதறிய உள்ளம் இதற்குக் கலங்குமா? மற்றும் தந்தையின் வேண்டுகோளில் இருக்கும் உண்மையையும் உணர்ந்தார். 'பட்டம் பதவியை வெறுத்த எனக்குப் பரம்பரைச் சொத்தும் சொத்துத்தான். ஆகையால், அதனையும் வேண்டேன்,' என்று தந்தைக்கு எழுதிவிட்டார்.

"நான் முழுஉரிமை வாழ்வை விரும்புகிறேன். ஆங்கிலர்க்கும் நம் நாட்டுக்குமுள்ள தொடர்பை அறுத்தெறிய ஆவல் கொண்டுள்ளேன். ஆதலால், ஆங்கில அரசுக்கு அன்புடன் சேவை செய்வதாக உறுதிமொழியளித்துச் சட்டத் தொழில் செய்யும் இழிவைச் சட்டை செய்யமாட்டேன். என் மனச்சான்று வாட்டும்! ஆகவே, தங்கள் மனம் மகிழ வழக்கறிஞனுக வாழ விரும்பாமல், இவ்வாறு செய்ய நேர்ந்தது,"

இவ்வாறு எழுதிவிட்டார்.

வரகநேரி ஐயர் குடும்பம் அப்போது வாடியநிலைமை என்னென்பது!

ஒற்றர்களின் ஓயாத பார்வைக்குக் கலங்கிய பாக்கிய லட்சுமி தன் நாலு வயதுச் செல்வ மதலை 'பட்டு'வுடன் அத்தான் வீட்டுக்கு மறுபடியும் வந்துசேர்ந்தாள். அவளுடைய அத்தான் பசுபதி ஐயர் ரங்கூனைவிட்டு நம் நாட்டுக்கு வந்துவிட்டார். அவர் அவளை அன்புடன் வரவேற்று ஆதரவு செய்தார். எனினும், ஒற்றருடைய பார்வை அவள்மீது படாமல் மறைவாகவே பாக்கிய லட்சுமி பதிவிருக்க நேர்ந்தது. தன் குடும்பத்தை வாட்டும் துயர் தன் அத்தானுக்கும் நேராமற் பார்த்துக் கொள்ளவேண்டுமே.

இந்நிலையில் மறைந்து வாழும் மங்கையின் மழலைச் சிறுமியைத்தேடி மறலி வந்துவிட்டான். உளவாளிகளின் தொல்லையைத் தப்பியவள் காலச் சுழலுக்குத் தப்ப முடியவில்லை. குழந்தைக்கு வயிற்றுக் கடுப்பு வந்தது. மருத்துவரை யழைத்துவந்து காட்ட வழியின்றி மனமுடைந்து கைவிட்டாள் பாக்கியலட்சுமி. பசுபதி ஐயர் தம் வீட்டிற் புரட்சிக்காரரை வைத்திருப்பதாக எங்கே வெளியாய்விடுமோ என்றஞ்சினர்! அக்காலநிலை அவ்வாறிருந்தது! மருத்துவரிடங் காட்டமுடியாமல் தெய்வத்தினிடங் காட்டித் தன் உயிரனைய குழந்தைக்கு உயிர்கொடுக்க வேண்டினுள். பயனென்ன? நாலுவயது நிரம்பிய பச்சைக் குழந்தையின் வெற்றுடலை மண்ணிற்போட்டு மூடும்படி நேர்ந்தது புரட்சி ஐயரின் மனைவிக்கு.

குழவியைப் பறிகொடுத்த அந்த அம்மையின் நிலையை எழுத்துக்கள் எவ்வாறு தெரிவிக்கும்? கணவ

ரைப் பிரிந்து வயிற்றுச் சோற்றுக்கும் பிறர் முகம் நோக்க நேர்ந்த நிலையில், 'உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்ததைப்'போன்று ஆறுதல் அளித்து வந்த அருமைச் சிறுமியையும் இழந்தவளின் நிலை மிகவும் இரங்கத்தக்க தாக முடிந்தது.

'இடிமேல் இடி'யாகப் புரட்சி வீரர்களின் நிலை மேலும் புதிய செய்திகளைக் கொடுத்தது. வீரரான சவர்க்காரின் ஆயுள் சிறைத்தண்டனை அப்போதுதான் நிகழ்ந்தது. ஐயரின் பாரிஸ் மறைவு வாழ்வு பாக்கியலட்சுமியின் உள்ளத்திற் சம்மட்டியடி போன்று விழுந்தது. தன் ஆருயிர்க் காதலரை உயிருடன் காண்பதும் முடியாதோ என்று கலங்கும் நிலையில் நின்றாள் அவள். குழந்தையைப் பறிகொடுத்த கொடுந்துயர் போனஇடந் தெரியவில்லை. கொழுநர் எங்கே சவர்க்காரைப்போல் சாகும்வரை வெளிநாட்டுச் சிறைவாசம் பெற நேருமோ என்று குமுறினாள். கண்ணீருங் கம்பலையுமாக ஒடுங்கி நின்றாள் அந்த உத்தமி! பாரிஸிலிருந்து ஐயரின் கையொப்பமிட்ட கடிதங்கள், 'நான் இனி இந்தியா விற் காலடி எடுத்து வைக்கமுடியாது,' 'என்னை எதிர் பாராதே,' 'நான் இங்கேயே இருக்க எண்ணிவிட்டேன்,' என்ற செய்திகளையே திடுக்கிடுமாறு செப்பிவந்தன.

இறுதியாக, 'நீயும் பாரிஸ் வந்துவிடுவது நல்லது. வந்தால் இங்கேயே இருக்கலாம்,' என்று கூறியது ஒரு முடங்கல். அம்முடங்கலாற் பாக்கியலட்சுமியின் மன முடங்கல் நிமிர்ந்தது. 'காணமுடியுமா?' எனக் கலங்கிய உள்ளங் 'காணவும் வழியிருக்கிறது' என்று தளிர்த்தது. அவளுடைய உள்ளப்பறவை பாரிஸுக்குப் பறந்தது. பழகாத இடமெனப் பார்த்ததா? சென்று தேடித் திரிந்

தது. உள்ளம் போனுற் போதுமா? உயிரைத் தேடி உட லன்ருே செல்லவேண்டும்? பணமுண்டா? வழித்துணை தான் உண்டா? காணவேண்டுங் காணவேண்டும் என்று துடித்தாள் தோகைநல்லாள்.

காதலனை லண்டனுக்கனுப்பிய அருளாளரே காத லியையும் பாரிஸுக்குக் கொண்டுபோய்விட்டுவர ஒப்புக் கொண்டார். பாரிஸுமாநகரைத் தேடி முன்னேயே சென்ற மனத்தைத் தேடிச்செல்லும் வாய்ப்புங் கிடைத் ததே யென்று பெருமகிழ்வு கொண்டாள் பேதை. பய ணத்திற்கு யாவும் பக்குவமாய் விட்டன. எனினும், 'ஊழிற் பெருவலி'யும் உண்டோ? வழித்துணையும் வள் ளலுமாக இருந்த பசுபதி ஐயருக்கு ஓரிடுக்கண் வந்து விட்டது. குதிரை மீதிருந்து வீழ்ந்து கால் பிசகியது! 'திருநாள் வெறுநாள்' ஆயிற்று. பாக்கியலட்சுமியின் மனக்கோட்டை மண்ணுயிற்று.

ஐயரின் கடிதங்கள், 'வா! வா!!' என வரவேற்ற வண்ணம் இருந்தன. 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந் திட்டொன்ருகும்.' பாக்கியத்தையுடைய பாக்கியலட்சுமி புழுப்போல் துடித்தாள்.

சிலநாட்கள் கழித்து, "நான் தென் அமெரிக்காவி லுள்ள பிரேஜிலுக்குப் போகிறேன். அங்கே தென்னிந் தியரெல்லோருங் குடியேறினும் இனிதே வாழலாம்," என்று சில கடிதத் தொடர்கள் தெரிவித்தன! ஐயரின் முன்னைய கடிதங்களின் சொற்கள் என்ன? இப்போ தையக் கடிதங்கள் அறிவிப்பவை என்ன? நல்லகாலமாக அந்த நங்கை பாரிஸுக்குப் போகாமல் நின்ருள்! போயிருந்தால்?

இறுதியாக ஒரு சீட்டு வந்தது காமா அம்மையாரிடமிருந்து. "உன் கணவர் தொலைவிலுள்ள ஒரு நாட்டுக்குப் போயிருக்கிறார். எங்கு என்றும் ஏன் என்றும் நீ வினவக்கூடாது. பொறுமையுடன் இருத்தல் வேண்டும்," என்று கூறியது அச்சீட்டு. தன் பாக்கியத்தின் போக்கை எண்ணிப் பொருமினாள் பாக்கியலட்சுமி! மனம் இடிந்தாள்! 'வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்'யும், துயில் நீங்கிய கண்களும் மொழி நீங்கிய செயலும் வற்றிய உள்ளமுமாக வாடி நின்றாள். சிந்தனைக்குந் தென்பின்றித் தேம்பினாள்.

இங்கிலையிலே ஐயரிடமிருந்து புதுவைக் கடிதம் புகுந்தது. 'வாடிய பயிரில் மழை பொழிவது போல்' அது கருணையைப் பொழிந்தது. பட்டமரந் தளிர்த்தது. பாக்கியலட்சுமி தன் ஆக்கத்தைத் தேடிப் புதுவை வந்து சேர்ந்தாள். ஐயரின் இல்லறம் மறுபடியுந் தொடங்கியது. இருவரும் அடைந்த மகிழ்ச்சியைக் காதலரின் உள்ளமே மதிப்பிடவல்லது.

## புதுவை வாழ்க்கை

பாரிஸ்டர் பட்டமும் அதனாற் கிடைக்கும் வழக்கறிஞர்பதவியும் பதவிக்குத்தக்க பொருளூற்றும் இழந்து, தந்தையின் சொத்தையும் 'சொத்து' ஆக்கிக்கொண்டு, வறுமையும் தாமுமாகப் புதுவையிற் பதிவிருக்கும் வீரரான ஐயரின் வாழ்க்கை, செல்வாக்கு நிரம்பியதாக இருக்குமா? பாக்கியலட்சுமியின் வாழ்க்கைத்துணை கிடைத்தும் பாக்கியம் மட்டும் வரவில்லை. மற்றும் இன்னல் பல வற்றால் உடைந்த உள்ளம் புரட்சித் தீயை விட்டு விலகிக் குதிக்கவும் இசையவில்லை.

ஆங்கிலேயரின் அடக்குமுறைச் சட்டத்திலிருந்து தப்பிப் புதுவை வந்தவர்களில் முதல்வர் நாட்டுக்கவிஞர் பாரதியார். இரண்டாமவர் அரவிந்தர். மூன்றுமவர் வ. வே. சு. ஐயர். இவர்கள் மூவரும் புதுவையின் விளக்குகளாக மிளிர்ந்தனர். எனினும், கடன்காரர் தொல்லையிலிருந்து தப்ப ஆங்கில எல்லையிலிருந்து மக்கள் வந்து பதிவிருக்கும் புதுவையில் இவர்களுக்குப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கவில்லை யெனலாம். இவர்களைச் 'சுதேசிகள்' என்று புறக்கணித்து நோக்கினர் புதுச்சேரி மக்கள். 'காலத்தின் கோலமன்றோ அது?'

ஐயரின் குடும்ப வாழ்க்கையில் இடும்பை புகாத நாளே இல்லை. எனினும், 'வறுமையிற் செம்மை கண்டார் அவர். அவருக்குப் பல இடங்களில் இருந்து நூறும் ஐம்பதுமாகக் கிடைக்கும். அப்பணத்தை அவர் தம் குடும்பத்திற்குச் சிக்கனமாகச் செலவு செய்துகொண்டு மிகுதியைத் தம்மைப்போல் புதுவைப் புகல்கொண்டு வாடும் புரட்சி வீரர்களுக்கு வழங்குவார். மிகுதியைப் புரட்சி வீரர்களின் வரலாறுகளையும் இராணுவ நூல்களையும் கருவிகளையும் வாங்கப் பயன்படுத்துவார். திருநெல்வேலி வட்டத்திலே நடைபெறும் 'அபிநவ' பாரத சங்க'த்திற்கும் இவருடைய கொடை பயன்பட்டது. அச்சம் எனும் கொச்சை மொழியைக் கூறவும் அறியார் அவர்.

ஐயருக்கு ஐரோப்பியரின் கலையும், முயற்சியும், நாட்டுப்பற்றும், ஒற்றுமையும், நுண்ணறிவும் ஆர்வத்தை உண்டுபண்ணின. எனினும், அவர்கள் இந்தியாவை அடிமைப்படுத்திச் சுரண்டுவது மட்டும் வெறுப்பைத் தந்தது. கலைவளர்ச்சிக்கும் கைத்தொழில் வளர்ச்

சிக்கும் ஐரோப்பியரின் உறவு நன்றெனினும் அரசியல் கடிவாளம் அவர்களிடம் இருப்பது தீமையெனச் சிந்தை கொண்டார். உரிமையை மறுக்கும்வரையில் ஒத்துழைக்கக் கூடாதென உறுதிபூண்டார்.

ஐயரின் வீர உணர்ச்சியும், பாரதியாரின் கலையும், அரவிந்தரின் யோகமும் ஒன்றுகூடி ஒரே குடும்பமாயின. கவிஞரின் நாட்களையும், வீரர்களின் நாட்களையும் கொண்டாடுவார்கள். ஒருங்கே அமர்ந்து கலைகளை ஆராய்வார்கள். தங்களை நாடிவரும் நாட்டுப் பற்றுடைய நல்லோர்கட்கு வேண்டியவற்றைக் குறிப்பறிந்து கொடுப்பார்கள்.

இவர்கள் குடியிருந்த ஈசுவரன் தருமராசாகோயில் தெருவிலும் பொன்னு முருகேசம், வரதப்பர், கலவை சங்கரன் செட்டியார் வீடுகளிலும் நண்பர்களுடன் இனிதே நாட்டுப்பேச்சு நடத்துவர்; மண்டயம் சீநிவாசாச்சாரியின் அன்புப் பிணிப்பில் அகப்பட்டுக் களிப்பர். அவர்களுடைய வாழ்வு வீரவாழ்வேயாம்.

இம் மூவரையும் ஆங்கில அரசாங்க ஒற்றர்கள் முற்றுகையிடத் தவறவில்லை. அரவிந்தரைப் பதினைந்து ஒற்றர்களும், ஐயரைப் பத்து ஒற்றர்களும் முற்றிக் காத்துவந்தனராம். 'சுதேசிகள்' புதுவையிலே இருப்பதாற் புதுவையை விலைக்கு வாங்கிவிடவும் ஆங்கில அரசாங்கம் முயன்றதாம். முடியாமற்போகவே முற்றுகையிட்டு வெளிக்கொணர விரும்பியதாம். ஒற்றர்களாலும் வறுமையாலும் வரும் இடுக்கண்களை இடுக்கட்படுத்தி நகைத்தார் ஐயர்.

ஐயருடைய கல்லூரி ஆசிரியர்களும் பசுபதி ஐயரும் புரட்சியை விட்டுவிட்டு ஆங்கில எல்லையில் அமைதி

யாக வாழ்க்கையை நடத்துமாறு பன்முறை அறிவு புகட்டினர். புரட்சியின் நோக்கம் கைவரும்வரையில் எவ்வாற்றானும் விலகவியலாது என மறுத்துவிட்டார். "நான் வீரவுரிமைக்காக என் வாழ்வை வழங்க முடிவு செய்துவிட்டேன். புரட்சியை வாழ்க்கையின் மூச்சாகக் கொண்ட நான் தன்னலமே குறிக்கோளாக வாழ விரும்பேன்,'' என உரைத்துவிட்டார் ஐயர்.

புதுவையில் இருக்கும்போது ஐயர், 'பிரெஞ்சு' மொழியை வளர்த்துக்கொண்டார். நெப்போலியன் வரலாற்றைப் 'பிரெஞ்சு' மொழியிற் படித்தறிந்தார்.

ஒற்றர்களின் தளரா முயற்சியைத் தட்டிவிட்டு வாழ்வு நடத்தும் தொல்லை புதுவையில் ஐயரை விடவேயில்லை. அவர் வெளியே சென்று வீடு திரும்பும்வரை கதவு உட்புறந் தாழிட்டேயிருக்கும். ஐயர் வரும்போது சில குறிப்புகள் பாக்கியலட்சுமிக்குத் தெரியும். வாயிலில் வந்ததும் காறித்துப்புவார்; குறிப்பிட்ட எண்ணிக்கையிற் கதவைத் தட்டுவார்; குழூஉக் குறிப்பெயர் வைத்துக் கூப்பிடுவார். ஐயரிடமும் பாக்கியலட்சுமியிடமும் எப்போதும் தற்காப்புக்காகக் கைத்துப்பாக்கி இருக்கும். புதுவை குடியரசு நாட்டைச் சேர்ந்தது. ஆகையால், தேர்தல் காலங்களிற் கட்டுப்பாடின்றி அந்நகரம் நரகம்போலக் கொந்தளிக்கும். அப்போதும் ஐயர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

முன்னரே ஒற்றர் தொல்லையில் உலைவுகொண்டிருக்கும் சுதேசிகட்கு மற்றுமோர் வலை சூழ்ந்தது. திருநெல்வேலி வட்டத்திற் புரட்சி நடத்திய கப்பலோட்டிய தமிழரான வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களையும், சுப்பிரமணிய சிவாவையும் தண்டிக்க 'ஆஷ்' என்னும் வெள்ளை

யன் காரணனுக இருந்தான். புரட்சித் தலைவர்களை அடக்கிய பெருமையால் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த அவனுக்குக் கலெக்டர் பதவி கைமேல் வந்தது. ஆனால், அவ்வட்டார மக்களின் வெறுப்பும் தலைமேல் கிடைத்தது. வழக்கறிஞரும் செல்வக் குடியினரும் அசைவிலா வீரரும் ஆகிய சிதம்பரம் பிள்ளையவர்களின் நாட்டுப்பற்றுக்குப் பரிசாக இருபதாண்டு சிறைவாசம் கிடைத்ததால், அங்குள்ள மக்களின் உள்ளம் குமுறியது. புரட்சிக்கனலை வீசியது. 17-6-1911-இல் கலெக்டர் 'ஆஷ்' துரை மணியாச்சியில், ஓடும் ரயிலிற் சுட்டுக் கொல்லப்பட்டான். சுட்டவன் 'வாஞ்சி' என்னும் இளைஞன். அவனும் ரயில்வே மலங்கழிக்கும் அறையில் தன்னையுஞ் சுட்டுக்கொண்டிறந்தான். அக் குழப்பத்தின் எதிரொலி புதுவையையும் தாக்கியது.

அதைப்பற்றிக் கூறும் 'செஷன் கமிட்டி' அறிக்கையின் சுருக்கம் :—

"வ. வே. சு. ஐயர் புதுவையில் இந்நாட்டு இளைஞர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளித்தார். 6-1-1911-லிருந்து மூன்று திங்கள் வரை அவரிடம் வாஞ்சி ஐயர் துப்பாக்கி சுடப் பயின்றார். புதுவையிலிருந்து துப்பாக்கிகள் கிடைக்கும் என்று திருநெல்வேலி மக்களுக்குச் செப்பியுள்ளார். 17-6-1911-இல் மணியாச்சி 'ஜங்ஷ'னில் சிதம்பரம் சிவா முதலியோரைத் தண்டித்த கலெக்டர் 'ஆஷ்' துரை ரயிலில் இருந்தார். அவரை வாஞ்சி ஐயர் சுட்டுவிட்டுத் தாமும் சுட்டுக்கொண்டு இறந்தார்."

தூத்துக்குடியில் 'ஆஷ்' துரையை அடக்கஞ்செய்து நினைவு மண்டபம் ஒன்று கட்டியுள்ளனர். அதில் ஒரு

கல்லில், "கலெக்டர் 'ஆஷ்' ஒரு கொலைகாரனாற் கொடுமையாகச் சுடப்பட்டு இறந்தார்," என்று வரைந்துள்ளது.

'ஆஷ்' கொலை, நாட்டையே கலக்கியது. வெள்ளையர் உயிர் ஊசலாடியது. அடக்குமுறை ஆட்சி உறுதியாயிற்று. 'வ. வே. சு. ஐயரே இக்கொலைக்கு முதல்வர்,' என வாதித்தது அரசாங்கம். ஆகவே, ஐயர் பலமுறை ஒற்றரின் தொல்லைக்கு ஆளானூர். அவற்றுள் இரண்டொன்றை இங்கே கூறுவோம்:

### பிள்ளையாருக்குப் பின்

ஐயர் எப்போதும் காலை மாலை உலாவச் செல்வது தவிராது. கடற்கரையிற் காலை ஞாயிற்றின் காட்சியில் மூழ்கிக் கிடப்பதில் அவருக்குத் தெவிட்டாத இன்பம். ஒருநாள் மாலை உலாவியபிறகு வீடுதிரும்பினூர் அப்போது ஒற்றர் அவரைத் தூக்கிச்செல்ல வட்டமிடத் தொடங்கினர். உணர்ந்தார் ஐயர். ஒற்றர் தமக்காகக் காவல்புரியும் தெருவழியே செல்லாமல் வேறு வழியாகத் திரும்பினூர். ஒற்றர்கள் அங்கும் நின்றனர். அது வெள்ளையர் தெரு. அங்கு ஒரு பிள்ளையார் கோயில் உள்ளது. அப் பிள்ளையாருக்குப் பின்னே ஓடி ஒளிந்து கொண்டார். பிள்ளையாரின் உருவம் பெரியதாக இருந்ததால் ஐயர் இருந்ததை அறியவில்லை எவரும். அன்றிரவு வழிபடும் ஐயர் வந்து அருச்சனை நடத்தியபொழுதும் மூச்சுவிடாமல் இருந்தார். பிள்ளையார்மேல் இடும் மலர்கள் ஐயர் மேலும் விழுந்தன. பலர் பிள்ளையாரைக் கும்பிட்டுச் சென்றனர். கதவும் மூடப்பெற்றது. இரவெல்லாம் அங்கேயே இருந்து, காலையில், ஒற்றர் தொல்லை நீங்கியபிறகு வீடு சேர்ந்தார்.

### பாடையில்!

ஒருநாள், ஐயர் தம் நண்பரொருவரின் வீட்டிற்குப் போயிருந்தார். ஒற்றர் அறிந்து முற்றுகையிட்டனர். ஐயரும் நண்பரும் அறிந்தனர். சிறிது நேரத்துக்கெல்லாம் வீட்டில் அழுகுரல் கேட்டது. பெண்கள் மாரடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தனர். பாடை ஒன்று கட்டப்பட்டது. பாடையில் ஐயர் படுத்தார். வெண்மையான துகில் அவரைப் போர்த்தது. நால்வர் தூக்கிக்கொள்ளப் பலர் பின்தொடரப் பாடை சுடுகாட்டை நோக்கிச் சென்றது. ஒரு குறுகிய சந்தில் பாடை இறக்கப்பெற்றது. ஐயர் எழுந்து நண்பர்கட்கு நன்றி கூறி வீடு நோக்கினர். நண்பர்களும் பாடையுடன் மாயமாக மறைந்து வீடு சேர்ந்தனர். ஒற்றர்களோ, 'ஐயர் பிடிபட்டார்' என்னுங் களிப்புடன் அவ்வீட்டைச் சுற்றி நீண்ட நேரங் காத்திருந்தனர். இறுதியில் ஏமாந்து சென்றனர்.

ஒவ்வோரமயம் ஐயர் இருக்குமிடமும் அவருடைய வாழ்க்கைத் துணைவிக்குத் தெரியாது. சில நாட்களில் வீட்டுக்கு வராமலே நண்பர் வாயிலாக நலத்தைமட்டும் மனைவிக்குத் தெரிவிப்பார். இக்காலங்களிற் பாக்கிய லட்சுமியின் மனம் படும் பாட்டை எங்ஙனம் விளக்க முடியும்?

### தேர்தல் சமயத்தில்

ஐயர் புதுவையில் தங்கியிருந்த அக்காலத்தில் தேர்தல் சமயமும் வந்தது. தேர்தல் காலத்திற் புதுவை மக்களின் உள்ளம் கடலலைபோற் கொந்தளித்துக் கனலை அள்ளி வீசும் என்பதை அறிவோம். அப்போது ஐயருடைய இல்வாழ்க்கையின் காதல் ஓவியமாக நான்கு

திங்கள் நிறைந்த பெண் குழவி யொன்றிருந்தது. அப் பசுங் குருத்தின் பெயர் சுபத்திரை. புதுவைக் காலிகள் அப்போது செய்த அடாச்செயல்கள் கணக்கில் அடங்கா.

அந்தக் காலிகள் ஐயரை அன்று ஒழித்துக் கட்டத் திட்டமிட்டனர். வீட்டையடைந்து கதவைத் தட்டினர். ஐயர் அப்போது உணவருந்துகிறார். அருமைக் காதல் மனைவி பரிமாறுகிறாள். குழவி ஏணையில் உறங்குகிறது. கதவைத் தட்டும் ஓசை கேட்டு பாக்கியம் கதவோரம் நின்று கருத்தைச் செலுத்தினாள். காலிகளின் ஆரவாரமென அறிந்தார். கள் வெறியேறிய அவர்களின் கடுமொழிகள் காதைத் துளைத்தன. ஐயரிடம் செப்பினாள். உடனே ஐயர் கை கழுவிக்கொண்டு கதவுக்கு முட்டுக்கட்டைகளாக உரல் இயந்திரம் முதலிய உறுதிப் பொருள்களைக் கொணர்ந்து சேர்த்தார். மனைவியையும், குழந்தையையும் அழைத்துக்கொண்டு உட்பக்கமாகச் சுவரேறி இரண்டு மூன்று மாடிகள் கடந்து நண்பரொருவர் வீட்டிலே புகலாக ஒப்பித்தார். வீட்டிலிருந்து வரும்போது மாதுளஞ் செடி ஒன்றின் முள் கீறிக் குழந்தையின் பிஞ்சுடலில் ரத்தம் பெருகியது ; பெற்றோர்களின் கண்களிலும் நீர் பெருகியது.

மனைவியையும், குழந்தையையும் மறைவாகச் சேர்த்துவிட்டுத் திரும்பினார் ஐயர். "ஐயர் சிக்கிக்கொண்டார். இனித் தப்ப முடியுமா? அடே கதவைத் திற," என்ற முழக்கமும், கதவைத் 'தட தட தட தட' என்று தட்டும் ஒலியும் ஐயரைப் புன்முறுவல் செய்யத் தூண்டின. 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்ற வள்ளுவர் வாய்மொழியைக் கைக்கொண்டவர் அவர். அவர் இருந்த வீடு மாடி வீடு. விரைந்து மாடியில் ஏறினார். கைத் துப்பாக்கியை எடுத்து வானில் நீட்டினார். 'டபார்!

டபார் !'' என்ற குண்டுகள் பறந்தன. ஐயரைத் தீர்த்துக் கட்டவந்த மிண்டர்கள் யாவரும், 'இது ஏதடா துன்பம்! துப்பாக்கியா?' என்று சிதறிவிட்டனர். என்னே அவர்களின் வீரம்! இவ்வாறு காலிகளை விட்டும் கலக்கப்படுத்தினர் காலமறிந்த ஒற்றர்கள்.

### கிணற்றில்

ஐயரிடம் பருவதம் என்ற வேலைக்காரி ஒருத்தியிருந்தாள். அவள் மிகவும் நம்பிக்கையானவள். அவளையும் ஒற்றர் ஒற்று வேலைக்குள்ளாக்க முயன்றனர். நூறு, இருநூறு தருவதாதவும் ஐயரைப் பற்றிய உளவு கூறும்படியும் வேண்டினர். அவர்களின் இச்சகமொழி கொச்சையாகவே போய்விட்டது. "எனக்கு உங்கள் பணமும் வேண்டாம் பாஷாணமும் வேண்டாம்,'' என்று விரட்டிவிட்டாள்.

ஒருநாட் காலையிற் பருவதம் தோட்டத்துக் கிணற்றில் தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தாள். தண்ணீர் 'வாளி'யில் ஒரு ஜாடி அகப்பட்டது. அதைப் பார்த்ததும், 'ஐயோ' சூனியம்! சூனியம்!!' என்று கூக்குரலிட்டாள். சூனியம் என்றால் ஒன்றுமில்லை யென்பர் கணக்கறிஞர்கள்; பாழ் என்பர் சமய அறிஞர்கள். பொது மக்களோ தீமை விளைவிக்குஞ் செயல் என்பர். பருவதமும் பொதுமக்களுடன் சேர்ந்தவள்தானே! ஐயருக்குச் சூனியம் வைப்பதாகவும் ஒற்றர்களின் கும்பல் உரைத்துக்கொண்டிருந்ததாகையால் அவள் அஞ்சிக் கூவினாள்.

பருவதத்தின் ஒலி கேட்டுப் பாக்கிய லட்சுமி ஓடி வந்தாள். அந்த ஜாடி அரக்கு முத்திரையிடப் பெற்றிருந்தது. உடைத்துத் திறந்தாள். அதற்குள் புரட்சிக் கூட்டத்தாரின் பட்டியலும், ஐயர் ஒரு வெள்ளையனைக்

காளிக்குப் பலி கொடுப்பதாக ஒரு கார்டு அளவில் அச்சுப் படமும், புரட்சிக்குரிய வேறு சில பொருள்களும் இருந்தன.

ஐயரும் படுக்கைவிட்டெழுந்து வந்து பார்த்தார். இது ஒற்றரின் வேலையென உன்னினார், உடனே மாஜிஸ்டிரேட்டிடம் கொண்டு காட்டினார். அவர் இனி அவ்வாறு நடவாமற் பார்த்துக் கொள்வதாக உறுதி கூறினார். இவ்வாறு ஜாடியைக் கண்ட செயல் ஒற்றர்களுக்குத் தெரியாது.

அன்று மாலை, ஆங்கிலப் போலீஸ்காரர்கள் வந்து ஐயர் வீட்டைச் சோதனை செய்தனர். சட்டி பானைகளையும் பெட்டி பேழைகளையும் தட்டிக் கொட்டிக் கவிழ்த்துப் பார்த்தனர். சந்து பொந்து மூலை முடுக்குகளை யெல்லாம் தேடினர். பிறகு, தங்கள் சூழ்ச்சியைக் கடைபிடிக்கக் கிணற்றில் இறங்கினர். துழாவிப் பார்த்தனர். தண்ணீரை வடிய இரைத்தனர். தூர்வை வாரினர். ஐயர், "கிணற்றைத் தூர்த்திருக்கும் மண்ணை நன்றாக வாரிவிடுங்கள். எங்களுக்குத் தூர்வை வாரப் பணமும் இல்லை. மிகவும் நன்றிசெலுத்துகிறோம்,'' என்று குறுநகையுடன் கூறினார். போலீஸார் 'திறுதிறு'வென விழித்தனர். தாங்கள் இட்ட ஜாடி எப்படிப் போயதென்று திகைத்தனர்; தலை கவிழ்ந்து சென்றனர். பிறகு, ஐயருக்கு முன்னரே தங்கள் சூழ்ச்சி தெரியுமென்றறிந்து வெட்கினர்.

### வல்லபதாஸ்

ஒற்றரின் சூழ்ச்சி ஒன்றும் ஐயரிடம் ஓடவில்லை. எங்ஙனமேனும் அவரைப் பிடித்து 'ஆஷ்' கொலையில் இணைத்து விடவேண்டும் என விடாமுயற்சி செய்தனர்.

சின்னபாபு சமுத்திரம் என்பது அருகிலுள்ள ஓர் ஊர். அது ஆங்கில எல்லையில் உள்ளது. அங்கே ஐயரைக் கொண்டுவந்து கொடுப்பவருக்குப் பதினாயிரம் ரூபா பரிசு தருவதாகப் பறை சாற்றினர். உண்மையான நாட்டுப் பற்றுள்ள மக்கள் ஒருவரும் ஒப்பவில்லை.

புதுவையில் வல்லபதாஸ் என்றொருவன் இருந்தான். அவனுக்கு நாட்டுப் பற்றை எடைபோடத் தெரியாது. அவன் பணமென்றால் வாய்திறக்கும் பிணம். அவன் ஒப்புக்கொண்டான் போலீஸாருக்கு உதவி செய்ய. அன்று தொடங்கி ஐயர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க நேர்ந்தது. அவர் வல்லபதாஸை நாடிச் சென்றார்; வீட்டில் கண்டார். "நீர் என்னைக் காட்டிக்கொடுக்க எதிரிகளிடம் பொருள் வாங்கிக்கொண்டீராமே! இதுதகுமா?" என்றார்.

வல்லபதாஸ் திடுக்கிட்டான். நேருக்கு நேராக அதே ஆள் வந்து மிரட்டுகிறானே என்று திகைத்தான். பிறகு, ஒருவாறு தெளிந்து துணிவுடன், "ஆமாம்! நீர் எந்த ஊர்க்காரரோ, தெரியாது! இங்கே வந்து மக்களின் அமைதியைக் கெடுத்துக்கொண்டு திரிந்தால் ஏன் பிடித்துக் கொடுக்கக் கூடாது?" என்று மிடுக்குடன் விடை கொடுத்தான். மற்றும், "உங்கள் மனைவியும் மைத்துனியுங்கூட வெடிகுண்டுகள் செய்கிறார்களாமே!" என்றொரு சொல்லையும் வெடிகுண்டெனத் தூக்கி வீசினான்.

"நீர் சொல்வது முற்றும் பிழை; பொய்!" என்று முழங்கினார் வல்லபதாஸின் மனம் மாறவில்லை. சிறிது வல்லபதாஸின் முகத்தை விறைத்துப் பார்த்துவிட்டு, "நன்று; உம்மாலானதைச் செய்துகொள்ளலாம்," என்று கூறி வெளியே வந்தார்.

இவ்வாறு இன்னும் எத்தனையோ இடுக்கண்கள் ஒற்றர்களால் நேர்ந்தன. அவற்றைத் துடைத்துவிட்டு, வாழ்க்கைப் புயலில் அஞ்சாது நடந்து சென்றார். 1914-ஆம் ஆண்டும் வந்தது. இதுவரையில் இடர்க் கடலிற் சுறாமீனாகத் துள்ளி விளையாடினார்.

1914-ம் ஆண்டு ஜர்மனி போர் தொடங்கியது. ஐரோப்பா அலை மோதியது. உலகம் அச்சத்துடன் நோக்கியது. இப்போதும் ஆங்கில அரசாங்கம் புதுவை யைக் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு துழாவியது. பிரஞ்சு கவர்னர் ஐயரின் திறமையை அறிவார். ஐயருக்கு நலம் புரிய எண்ணுவோரில் அவரும் ஒருவர். பிரஞ்சு துரைத்தனத்துடன் ஆங்கிலத் துரைத் தனம் அளவளாவியது. ஐயரை அல்ஜீரியாவுக்குத் தூக் கத் தூண்டியது.

குறள் மொழிபெயர்ப்பு

ஐயர் அறிந்தார். 'எப்போதாவது நாடுகடத்தி விடு வார்கள் போலிருக்கிறதே; ஏதாவது நிலையான தமிழ்த் தொண்டு செய்வோம்,' என்றெண்ணினார். திருக்குறளை ஆங்கிலத்தில் அழகிய நடையிலே பரபரப்பாக மொழிபெயர்த்து முடித்தார். இந்நிலையிற் பிரஞ்சு கவர்னர், "அல்ஜீரியா சென்றிருங்கள். உங்களுக்கு வேண்டிய பொருள் தருகி றோம்,'' என்றார். ''எங்களுக்கு இருபதினாயிரம் செலவா கும்.'' என்றார் ஐயர். கவர்னர் திகைத்தார். ஐயரின் துணிவை மெச்சினார். "நன்று! இங்கேயே இருங்கள்,'' என்று வீட்டுக்கு விடை தந்தார். ஐயர் புதுவையிலேயே இருப்பதற்கு வேண்டியதைச் செய்தார். இவ்வாறு அவிந்தது ஐயரின் புரட்சிக்கனல்.

## எ. பிற்காலம்

### கலைப்பணி

ஐயருக்கு வருவாய் இல்லையென்று முன்னரே அறிவோம். நண்பருடைய தொண்டினையே நாளெல்லாங் கொள்வது நன்றா? எனவே, ஐயர் நூலெழுதும் பணியில் ஈடுபட்டார். 'வீட்டுப்பணியே நாட்டுப்பணி'யாக நலம்பெறும் வழியாயிற்று. ஐயராலும் நண்பர்களாலும் 'கம்ப நிலையம்' எழுந்தது. கம்ப ராமாயணம் பாலகாண்டம் சொற்பிரிவு செய்து பதிப்பிக்கப் பெற்றது. மற்றும், மங்கையர்க்கரசியின் காதல், கமல விஜயம், காங்கேயன், குளத்தங்கரை அரசமரம், எதிரொலியாள், அழேன் ழக்கேன் முதலிய கதைகளும், சந்திரகுப்த சக்கரவர்த்தியின் சரித்திரம், புக்கர் வாஷிங்டன் முதலிய வரலாறுகளும் வெளியாயின. 'எமர்ஸன்' என்னும் நூலிலிருந்து தன்னம்பிக்கை என்னும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவற்றை வெளியிடப் பணக்கொடை செய்தவர் சிங்கப்பூர் அண்ணாமலை முதலியார் என்னும் பெரியாராவார். கம்ப நிலையம் பலருடைய சந்தாவாலும், ஐயரிடமிருந்த சிறு தொகையாலும் அச்சகம் ஒன்றையும் நிறுவிக்கொண்டது. 1917-ஆம் ஆண்டு வரையில் இத்தகைய கலைவாழ்விற் காலங் கடந்தது. அதுவரையில் அவருடைய நாட்டுப்பற்று உள்ளத்தின் ஒரு மூலையில் ஒளிவீசிக்கொண்டிருந்தது.

### காந்தியடிகளைக் கண்டார்

1917-ஆம் ஆண்டில் காந்தியடிகள் புதுவைக்கு வந்தார். அடிகளின் அடிகளிலே தம் புரட்சிக்கனலுக்கு மற்றோர் உருவமாக அன்புப்போர் தொடுக்கும் அருளுள்ளம் பெற்றார். வீர சவர்க்கார் உறவால் துப்பாக்கி பற்றின

வர், அடிகளின் காட்சியால் 'கைராட்டை' ஏந்தினர். 'பெருவலி படைத்த ஆங்கிலரைப் படையேந்தும் பழக்க மற்ற பாரத மக்களாற் படை கொண்டு தாக்கி வெல்ல முடியாது,' என்பதை நன்குணர்ந்தார். தென்னுப்பிரிக் காவிலும் கெய்ரோவிலும் அடிகளின் அறப்போர் அன் புப் படையிலே வெற்றி பெற்றதை உணர்ந்ததால் அன் புப் படையே சிறந்ததென எண்ணினர். பத்தாண்டுகள் வரையில் அடிகளின் கொள்கையிலே தம் மனம் ஈடு படாததை எண்ணி வெள்கினர். 'அடிகள் இணையற்ற ஏந்தல்' என்று மனத்தகத்தே பதிவு செய்துகொண் டார். 'எனினும், புரட்சி இன்றி நம் நாடு உரிமை பெறுமா?' என்ற ஐயம் ஐயரை விடவில்லை. இரண்டாண் டுகள் ஏகின.

### காசியில்

*1919*-இல் ஐரோப்பியப்போர் முடிந்தது. 'வெர் சேல்ஸ்' உடன்படிக்கை நடந்தது. இந்தியாவில் 'மாண் டேகு செம்ஸ் போர்டு' சட்டம் அமுலுக்கு வந்தது. *1920*-இல் அரசியல் குற்றவாளிகள் பொது மன்னிப்புப் பெற்று மகிழ்ந்தனர். ஆகவே, புதுவையில் தங்கியிருக் கும் புலிகள் வெளிவரலாம் என்று ஐயர் அறிந்தார். பாரதியாரும் அறிந்தார். வெளியேற எண்ணிய பாரதி யார் சின்னபாபு சமுத்திரம் சென்றவுடன் அவரைப் பற் றினர் போலீசார். பிறகு விடுதலை செய்தனர். ஐயரும் சென்னைக்கு வந்து சேர்ந்தார். பிறகு, உறவினரின் விருப் பப்படி காசி யாத்திரை செல்லப் புறப்பட்டார். காசி யிலே தம் 'கருமத்தைக்' கழுவிவர!

வடநாட்டிலுள்ள புகழ்பெற்ற — வரலாற்றிடம் பெற்ற — ஊர்கள் ஐயரின் உளத்தைக் கவர்ந்தன.

பம்பாய், நாசிக், பஞ்சவடி, சபர்மதி, பூனு, மதுரை, அயோத்தி, முதலான இடங்களைக் கண்டு களித்தார். சுவாமி சிரத்தானந்தர் நடத்திவந்த குருகுலங்களைப் பார்வையிட்டார். தில்லி, கயா முதலான தலங்களைச் சேவித்துக்கொண்டே காசியை அடைந்தார். அங்கே ஐயரின் நண்பர் ஆதிமூர்த்தி என்பவர் இருந்தார். அவர் ஐயரைப் பரிவுடன் வரவேற்றுப் புகழ்மாலை சூட்டிப் பாராட்டினுர்

30—5—1920இல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்தது. தலைவர்களெல்லாம் ஒன்றுகூடிப் பஞ்சாப் படுகொலையைப்பற்றி 'ஹண்டர் கமிட்டி' வெளியிட்ட அறிக்கையை ஆராய்ந்தனர். அக்கூட்டத்திற்குத் திலகர் பெருமானும் வந்திருந்தார். அவரைக் காணும் பேறு ஐயருக்குக் கிடைத்தது. திலகரை மனக் கோயிலிற் கண்டு வந்த ஐயர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். காசியில் விசுவேசுரப் பெருமானை வணங்கித் தம் உறவினரின் விருப்பத்தை நிறைவேற்றினுர். பிறகு, சென்னை திரும்பினுர்.

### 'தேசபக்தன்' ஆசிரியர்

'தேசபக்தன்' என்னும் பத்திரிகை 7-12-1917இல் பிறந்தது. 5—12—1917 வரையில் வெஸ்லி கல்லூரித் தமிழாசிரியராகப் பணிபுரிந்த உயர்திரு திரு. வி. கலியாண சுந்தரனுர் 'தேசபக்தன்' ஆசிரியரானுர். அப்பத்திரிகைக்கென்றே 'பிரிட்டிஷ் இந்தியா பிரஸ்' என்னும் அச்சுக்கூடம் அமைந்தது. சுப்பராய காமத் என்பாரும் குமாரசாமி செட்டியார் என்பாரும் சேர்ந்து அச்சுக்கூடம் அமைத்தனர். சுப்பராய காமத் அமைச்சராகவும் பத்திரிகையின் டைரெக்டர்கள் சக்கர்வர்த்தி - இராசகோபால ஆச்சா

ரியார், டாக்டர் ராஜன், டாக்டர் வரதராஜலு நாயுடு, ஈ. வே. ராமசாமி நாயக்கர், ஆதிநாராயண செட்டியார், ஜார்ஜ் ஜோசப், லாட் கோவிந்த தாஸ் முதலியோராக வும் அமைந்தனர். இரண்டரை ஆண்டுகள் வரையில் 'தேசபக்தன்' பதிப்புரிமையுடன் ஆசிரியராக இருந்த பெரியார் திரு. வி. க. அவர்களால் 'தேசபக்தன்' மிகவும் தலைமை சான்ற தமிழ்ப்பணி புரிந்துவந்தது. அப்பத்தி ரிகை செய்த அரிய தொண்டினைத் திரு. வி. க. அவர் களின் வாழ்க்கைக் குறிப்பில் அவர் கூறும் முறையி லேயே இங்குக் குறிப்பது நன்று.

"அந்நாளில் நாட்டுமொழிப் பத்திரிகைகளில் அயல் மொழி நாற்றம் வீசும். அரசியல் குறியீடுகள் அந்நியத் தில் அப்படியே பொறிக்கப்படும். 'தேசபக்தன்' பத்தி ரிகை யுலகிற் புரட்சி செய்தான். எப்படிச் செய்தான்? படிப்படியே செய்தான். புரட்சி நிகழ்ந்ததென்று பத்தி ரிகை யுலகுக்கே தெரியாது. புரட்சிகளைத் 'தேசபக்த னிற்' காணலாம். 'தேசபக்தன்' தமிழாக்கிய அரசியல் சொற்களும் சொற்றொடர்களும் குறியீடுகளும் இப் போது பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பிறவிடங் களிலும் ஏற்றமுற்று அரசுபுரிதல் வெள்ளிடைமலை.

"தமிழ் நாட்டில் பல குறைபாடுகள் உண்டு. அவை களில் ஒன்று பெருந்தலைவர்கள் தமிழ் தெரியாதென்று ஆங்கிலத்தில் நாவன்மை காட்டிவந்தமை. அதுபற்றித் 'தேசபக்தன்' எழுப்பிய கிளர்ச்சி தலைவர்களைத் தமிழ் பேசச்செய்தது. இந்நாளில் தென்னாட்டு மாநாடுகளின் நிகழ்ச்சி முறைகளும் காரியக் கூட்டங்களின் நிகழ்ச்சி முறைகளும் தாய்மொழியில் நடைபெற்று வருவது கண்கூடு. மேடைகளிற் பேசுதற்பொருட்டுத் தலைவர்

கள் 'தேசபக்த'னைப் படித்ததும், தமிழாராய்ந்த ஐரோப்பியப் பாதிரிமார் பலர் 'தேசபக்தன்' சந்தாதாராயதும் ஈண்டுக் குறிக்கத்தக்கன. 'தேசபக்தன்' தமிழரை அந்நிய மொழி மோகத்தினின்றும் விடுவித்தானென்று சொல்வது மிகையாகாது."

இவ்வாறு அவருடைய வாழ்க்கைக் குறிப்பு (268-ஆம் பக்கம்) கூறுகிறது. அழகிய இலக்கியத் தமிழ் நடையில் அணிபணியான சிறு தொடர்களால் அன்னைத் தமிழ்மொழி 'தேசபக்த'னில் அமைந்தது. சட்டசபைகளிலும் தமிழ் மொழியிற் பேசலாம் என்ற துணிவை நல்கியது.

மொழிவளர்ச்சி மட்டுமன்றி நாட்டுப் பற்றையும் 'தேசபக்தன்' வளர்த்தது; அரசியல் ஊழல்களைக் கண்டித்தது. 'தேசபக்தன்' எழுத்தாலேயே புதுவையில் மறைந்திருந்த வ. வே. சு. ஐயரும், பாரதியாரும் வெளிவந்தனர் என்பது மிகையன்று.

வ. வே. சு. ஐயர் தம் கைப்படத் திரு. வி. க. அவர்கட்கு எழுதிய கடிதத்தை இங்கே குறிப்பிடுவது பொருந்தும்:—

"புதுவை. பங்குனி, 8—

........தாங்கள் 'பக்த'னில் அடிக்கடி எழுதியதன் பயனாக நான் ஆங்கில இலாகாவுக்கு யாதொரு நிபந்தனைகளும் தடையும் இன்றி வரலாம் என்று, அரசாங்கத்தார், என் சகோதரன் எழுதிய கடிதத்திற்குப் பதில் இறுத்திருக்கிறார். என் நன்றியை எதிர்பார்த்துத் தாங்கள் கிளர்ச்சி செய்யவில்லையாகிலும் என் மனமார்ந்த நன்றியைத் தங்களுக்கு நான் தெரிவியாமலிருத்தல் எங்ஙனம் சாத்தியம்?

கட்டுகள் நீங்கிவிட்டமையால் தாங்களும் இதர தலைவர்களும் குறிப்பிடுகிறபடி தேசத்தொண்டைச் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். பங்குனி 26, 27உ வாக்கில் திருச்சி செல்லலாம் என்றிருக்கிறேன். நண்பர்களுக்கு இச்செய்தியைச் சொல்ல வேண்டுகிறேன்.''

இக் கடிதமும் திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பில் வெளியாகியுள்ளது (284—285-ஆம் பக்கங்கள்).

இரண்டரை ஆண்டு வரையில் 'தேசபக்தனை' வளர்த்த திரு. வி. க. அவர்கள் 22-7-1920-இல் தாம் வெளியேறுவதாகத் 'தேசபக்த'னில் வெளியிட்டுவிட்டார்; வெளியேறியும்விட்டார்.

அவர்களுக்குப் பிறகு 31-7-1920-இல் ஐயரவர்கள் 'தேசபக்தன்' ஆசிரியரானார். புரட்சிவேலை செய்யலாமெனப் பொருந்தினார். புரட்சியென்பது இரத்தம் சொரியும் கத்திப் புரட்சியன்று. எழுத்துலகில் மக்கள் மனத்தை மாற்றும் புரட்சியே.

ஐயரவர்கள் ஆசிரியரானவுடன் முதலில் ஆசிரியப் பகுதியிற் குறிப்பிட்ட கருத்துக்கள் மிகவும் சால்புடையவை.

..................................................

ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அலங்கரித்த பத்திராசிரியர் ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும், தீரமும், நேர்மையும், கலங்காமையும், பாரபட்சமின்மையும், அவசியம் நேர்ந்தபோது காட்டிய நிர்த்தாக்ஷிணியமும் பத்திராசிரியத் தொழிலுக்கே பூஷணங்

களாக விளங்கின. அவருடைய அருங்குணங்களிற் சில வேனும் என் வியாசங்களில் தோன்றுமாறு தமிழணங்கு திருவருள் புரிவாளாக."

.........(திரு. வி. க. வா. குறிப்பு 287-ஆம் பக்கம்.)

ஐயர் 'தேசபக்தன்' ஆசிரியரானபோது திருவல்லிக் கேணியில் குடியிருந்தார். திங்களூதியமாகத் 'தேசபக் தன்' கொடுத்த நூறுரூபாவும் சரியாகக் கிடைக்க வில்லை. ஆறு திங்கள்வரை கொடுக்கப்படாமல் நின்று விட்டது, ஐயரை வறுமை வாட்டியது. எனினும், புகழ்கொடுத்தது.

'தேசபக்தனில்' ஐயரால் எழுதப்பெறும் தலையங் கங்கள் ஆங்கிலப் பத்திரிகையான 'நியூ இந்தியா'வில் மொழிபெயர்க்கப் பெற்றன. ஐயருக்குத் தலையங்கம் எழுதும் பொறுப்பு மட்டிலும் இருந்தது. நிர்வாகப் பொறுப்புகள் காமத் முதலியோரிடம் இருந்தன. பத்திரி கைக்கு வேண்டிய கட்டுரைகளை வீட்டிலும் எழுதிவரு வார். வீடும் பத்திரிகை நிலையமும் அவருக்கு ஒன்றே. இரவு பகலாகத் 'தேசபக்த'னுக்குத் தொண்டுசெய்தார் எனலாம்.

ஐயருடைய சென்னை வாழ்க்கை யாவருக்கும் எடுத் துக்காட்டாக இருந்தது. திருவல்லிக்கேணியிலிருந்து கடற்கரையோரமாகவே 'ஜார்ஜ் டவுன்' வரையில் பத்திரிகை நிலையத்திற்கு நடந்தே செல்வார். சிக்கன மான வாழ்க்கை. சட்டை அணியமாட்டார். காலை பத்து மணிக்குக் கடற்கரை வழியாக மதக்களிறு போன்று நிமிர்ந்த நடையுடன் செல்வார். அடர்ந்த தாடி, வகிரெடுத்த தலைமயிர், கதராடை, பூப்போட்ட கதர் மேலாடை, தோளிற் பை, காலில் மிதியடி, நெற்றி

யில் திருநீறு, புருவ நடுவிலே சந்தனப் பிறை, அதன் நடுவே குங்குமப் பொட்டு—இவைகளே ஐயரின் அடையாளங்கள். ரிக்ஷாவில் ஏறமாட்டார். கடற்கரைக் காட்சிகளைக் கண்டவாறே நடந்துசெல்வதில் அவருக்கு விருப்பு மிகுதி.

பத்திரிகை நிலையத்தில் மாலை நான்குமணிவரையில் வேலை செய்வார். பிறகு, நண்பர்களுடன் அளவளாவுதல், அரசியல் கூட்டங்களிற் பேசுதல், 'இந்து' முதலிய பத்திரிகைகளைப் படித்தல் முதலியவை செய்வார்.

இவ்வாறு ஒன்பது திங்கள்வரை 'தேசபக்தன்' நடந்தது. பிறகு, நிர்வாகத்தில் ஏற்பட்ட சிக்கல்களினுல் நின்றது. ஒன்பது திங்கள் ஆசிரியராயிருந்த ஐயர், அப்பத்திரிகையில் தாம் எழுதாத ஒரு தலையங்கத்திற்காக (வேருெருவர் எழுதிய தலையங்கத்திற்காக) ஒன்பது திங்கள் சிறையிலிருந்தார். 'தேசபக்தன்' பணி இவ்வாறு முற்றுப் பெற்றது.

### சிறை வாழ்வு

பல்லாரி 'செண்டர் ஜெயி'லில் ஐயர் தம் சிறைத் தண்டனையைக் கழித்தார். சிறைவாழ்வில் எவ்வகைப் புரட்சியும் செய்யவில்லை. அரசியல் குற்றவாளியாகையாற் சொந்த ஆடையே அணிந்தார். அங்குச் சுமாரான உணவையே அளித்தார்கள். முதல் வகுப்பில் வைத்திருந்தார்கள். ஆகையால், நூலாராய்ச்சியிலேயே அவருடைய பொழுது போயிற்று. 'எ ஸ்டடி ஆஃப் கம்பன்'* என்னும் ஆங்கில நூலை எழுதிஞர். கம்பராமாயணச் செய்யுட்களைப் பெரும்பாலும் ஆங்கிலக்

* A Study of Kamban.

கவிதைகளாகவே மாற்றினார். கம்பராமாயணத்தில் வரும் இராமன், இலக்குமணன் முதலிய கதாபாத்திரங்களைப்பற்றிய கம்பன் சித்திரங்களை மிக அழகிய முறையில் ஆராய்ந்து எழுதினார் கம்பராமாயணத்தைப் பிற உலக காவியங்களுடன் ஒப்பிட்டுக் காட்டினார். வடமொழி வால்மீகமும், துளசிராமாயணமும் இந்தியில் இராமாயணத்தைப்பற்றி எழுதியுள்ள வேறு நூல்களும் அவருக்கு ஆதாரமாக இருந்தன.

கட்டுரை எழுதியதோடு நில்லாமல், 'குருகுலம்' ஏற்படுத்தத் திட்டமும் இட்டுத் தமது நாட்குறிப்பில் எழுதிவைத்தார்.

சிறையிலிருக்கும்போது ஐயருடைய மனைவியும், மக்களும் துங்கபத்திரா ஆசிரமத்திலிருந்தனர். சிறை முடிந்தபிறகு, அவர்களை அழைத்துக்கொண்டு ஹம்பி, விஜயநகரம் முதலிய இடங்களையும், ஆந்திரநாட்டையும் சுற்றிப் பார்த்துவிட்டு வரகநேரி வந்து சேர்ந்தார்.

## குருகுலம்

குருகுலம் அமைப்பதற்குரிய பொருளும் இடமும் தேடிக்கொண்டிருந்த ஐயருக்குக் கல்லிடைக்குறிச்சிக்குச் செல்ல ஒரு வாய்ப்புக் கிடைத்தது. கல்லிடைக்குறிச்சியில் இருந்த போர்டு ஆரம்பப்பள்ளியை அங்கிருந்த ஆசிரியர்கள் 'திலகர் கல்விச்சாலை'யாக மாற்றியிருந்தனர் ஒத்துழையாமை இயக்கத்தில் அந்த ஆசிரியர்கள் ஈடுபட்டிருந்ததனால், அவர்கள் பள்ளிக்கு அங்கீகாரம் கிடைத்தது. திலகர் கல்விக் கூடத்திற்கு ஐயர் தலைவரானார். உடனே நாட்டுமுறையிற் கல்வி கற்பித்துவந்த அப்பள்ளியை ஒட்டித் தமிழ்க் குருகுலம் ஏற்படுத்தினார். அதை நடத்தப் 'பாரத்துவாச ஆசிரமும்' அமைத்தார்.

குருகுலத்திற் சேர்ந்த மாணவர்கள் யாவரும் பார்ப்பனச் சிறுவர்கள். திலகர் கல்விச்சாலையில் இருந்த பொருள்கள் குருகுலத்திற் சேர்ந்தன. இக்காலக் கல்விமுறையை ஒட்டியே கல்வி கற்பிக்கப்பட்டது. குருகுல நடைமுறையாகப் பள்ளி மாணவர்கள் காலையில் எழுந்து காலைக் கடன்களை ஒழுங்காகச் செய்து, துணி துவைத்துக் குளித்துக் கடவுள் வழிபாடு செய்தலும், மாலையிலும் ஒழுங்காகக் கடவுள் வழிபாடு செய்தலும் குறிப்பிட்ட நேரம் வரையிற் படித்தலும் நிகழ்ந்தன.

ஐயருக்குத் தனியே ஒரு குருகுலம் காணவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. ஆகவே, அதற்காகத் தக்க இடத்திற்கு அலைந்தார். தாமிரவருணிக்குத் தெற்கே மூன்று கல் தொலைவில் சேரமாதேவி என்னும் ஊரின் எல்லையில் முப்பது ஏக்கர் பரப்புள்ள ஒரு நல்லிடங் கிடைத்தது. கானாடுகாத்தான் வை. சு. சண்முகஞ் செட்டியார் அந்த இடத்தை மூவாயிரம் ரூபா கொடுத்து வாங்கித் தந்தார்.

அந்த இடத்தில் அழகான பல குடில்களும் கட்டடங்களும் மாணவர்கள் இருக்கவும் படிக்கவும், ஆசிரியர்கள் குடியிருக்கவும், தலைவரான ஐயர் இருக்கவும் அமைந்தன. குருகுல மாணவர்களும் ஆசிரியர்களும் கட்டடங் கட்டும் பணியில் இயன்ற உதவிகள் செய்தனர். கட்டடம் முதலியவற்றிற்குக் காங்கிரஸ் சபை ஐயாயிரம் ரூபா அளித்தது. சிலர் உண்டியுடன் புகைவண்டித் தொடரிற் சென்று சிறு சிறு தொகை திரட்டித் தந்தனர். மாணவர்கள் சில நாட்களில் ஆசிரியருடன் ஊரூராகச் சென்று பஜனைசெய்து உண்டிநீட்டி ஐம்பது அறுபது என ஈட்டி வந்தனர். மற்றும், பெரும்பான்மை

யாரான மாணவர்கள் திங்களொன்றுக்குப் பத்தும் பன்னிரண்டுமாகத் தம் உணவுச் செலவுக்கு நல்கினர். சிறுபான்மையாரான மாணவர்கள் அறவுண்டியும் இருக்கையும் பெற்றனர்.

புதுவையில் அமைத்த கம்ப நிலையமும், அச்சுநிலையமும் இங்கு வந்தன. மூவாயிரம் நூல்கள் அடங்கிய ஒரு நூல் நிலையமும் இருந்தது. 'பால பாரதி' என்ற திங்கள் இதழ் இங்கிருந்து வெளியாயிற்று. 'குரு கோவிந்த சிங்கன்' வரலாறும் வெளியிடப் பெற்றது.

இக் குருகுலத்திற்குப் பாரத்துவாச ஆசிரமம் என்று பெயர். இந்த ஆசிரமத்தின் தலைவர் வ. வே. சு. ஐயர். பாலபாரதி ஆசிரியராகவும், இவருக்கடுத்த நிலையில் மேற்பார்வையாளராகவும், ஆசிரியராகவும் இருந்து பணி புரிந்தவர் யோகி சுத்தானந்த பாரதியார். இவர் ஐயருக்கு வலக்கை போன்றிருந்து குருகுலப் பணி புரிந்தார். இவருக்கென ஒரு தவக் குடில் அமைந்திருந்தது.

ஆங்கிலத்திலும் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர்களான ஆசிரியர்களும் ஆசிரமத் தொண்டு புரிபவர் எனப் பலர் இருந்தனர். மலையாளத்தார் ஒருவரும் இருந்தார். இரண்டு மூன்று ஆசிரியர்கள் குடும்பத்துடன் தனித்தனிக் குடிலில் இருந்தனர். எல்லோரும் ஆசிரமத்திற் பற்றுடன் பணி செய்து வந்தனர்.

ஐயருடைய குடும்பம் திரிசிரபுரத்தில் இருந்தது. அவர் மகள் சுபத்திரையும், மகன் கிருஷ்ணமூர்த்தியும் ஆசிரமத்திற் கல்வி பயின்றனர். குடும்பத்திற்குத் திங்கள் தோறும் இருபத்தைந்து ரூபா ஐயர் அனுப்பினார்.

மாணவர்கள் நாஞ்சில் நாடு, மலையாளம், பர்மா முதலான இடங்களிலிருந்தும் வந்து பயின்றனர்.

பயிர்த்தொழிலும், நெசவும் அங்குப் பயிற்றப் பெற்றன. தமிழ், வடமொழி, இந்தி, ஆங்கிலம், கணக்கு, வரலாறு, பூகோளம், இசை ஆகிய பாடங்களுங் கற்பிக்கப் பெற்றன. நான்கு திங்களுக் கொருமுறை நூறு மைல் வரை யாத்திரை செல்வதுண்டு. ஏட்டுக் கல்வியே யன்றி நல்ல பழக்க வழக்கங்களும் மாணவர்கள் பயின்றனர்.

### நடைமுறை

ஒவ்வொரு நாளும் காலையில் நாலரை மணிக்கு 'ஆசிரமத்தில்' விழிப்புண்டாகும். ஒவ்வொருவரும் குழி தோண்டி மலக்கழிவு செய்து மூடிவிட்டு வருவார்கள். பல் தேய்த்துக் கொள்வார்கள். ஆளுக்கொரு கூடை எடுத்துக்கொண்டு போய் எதிரிலுள்ள வாய்க்காலி லிருந்து மணல் வாரி வந்து மரங்களுக்குக் கொட்டுவார்கள். உடற்பயிற்சி செய்வார்கள். 'ஆசிரம'த்தின் பொதுவிடத்தை எல்லோரும் தூய்மை செய்த பிறகு, தத்தம் அறைகளைத் தூய்மை செய்வர். அப்போது ஓர் ஊதல் கேட்கும். மாணவரெல்லோரும் ஒன்று கூடி வரிசையாக நிற்பர். 'தண்டால்,' 'பஸ்கி' முதலான உடற்பயிற்சிகளும் நடக்கும்.

பிறகு, நிரல் நிரலாக எண்சுவடி, குழிமாற்று, நிகண்டு, மனப்பாடப் பகுதியான பாட்டுக்கள் ஆகிய வற்றைச் சொல்லிக்கொண்டே 'ஐயன் வாய்க்கால்' செல்வார்கள். அங்குத் துணி துவைத்துக் குளித்தபிறகு, திருநீறுவது, திருமண்ணுவது அணிந்துகொண்டு சந்தியும், 'செப'மும் செய்வார்கள். சனிக்கிழமைதோறும் எண்ணெய் நீராடுவதும் 'ஐயன் வாய்க்காலி'லேதான். சந்தியும் 'செப'மும் முடிந்தபிறகு, தேவார திருவாசகங்

களும் திருவாய்மொழியும் ஓதியவாறே ஆசிரமத்துக்குத் திரும்புவார்கள். வாய்க்காலில் இருந்தபடியே ஒருவர் அன்றைய 'தபால்' வாங்கிவரச் செல்வர்.

ஆசிரமம் சேர்ந்தவுடன், முதலில் எல்லோரும் ஒருங்கே நின்று, கடவுள் வாழ்த்துப் பாடுவர். ஐயருக்கு 'ஆசாரியர்' என்ற பட்டமும் ஆசிரமத்திலுண்டு. 'ஆசாரியர்' முன்னே எல்லா மாணவரும் சென்று அமர்வர். அரைமணி நேரம் நம் நாட்டு வரலாற்றைக் கூறுவார் ஐயர். வீரர்களின் வரலாற்றை உணர்ச்சி ததும்ப உரைப்பார். வரலாறு முடிந்தவுடன் காலை உணவு நடக்கும். பிறகு, மாணவர்கள் வகுப்புக்குச் செல்வார்கள்.

வகுப்புக்கள் பெரும்பாலும் மர நிழலிலேயே நடக்கும். மழைக்காலமானால் திண்ணைகளில் நடக்கும். இயற்கையைப் பார்த்து நடக்கும் வகுப்புக்களும் உண்டு. பதினொன்றரை மணிக்குக் காலை வகுப்பு முடிவுறும். உடனே, மாணவர்கள் வட்டமாக நெருங்கி நின்று கடவுள் வாழ்த்துப் பாடுவர்.

பிறகு, சமையற்கட்டில் நுழைந்து இலை தைப்பதும் சுற்றுவேலை செய்வதுமாக மாணவர்கள் பணிபுரிவர். சிலர் வட்டிலிலும் உண்பர். பிறகு, உண்கலங் கழுவி வாய் கொப்புளித்து, உண்ட இடத்தைத் தூய்மை செய்துவிட்டுத் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்று ஓய்வு கொள்வர். சிறிது இளைப்பாறியவுடன் நூல் நூற்பர். இது இரண்டுமணி வரையில் நடைபெறும், எல்லோரும் நாள்தோறும் ஒருமணி நேரம் நூற்கவேண்டும் என்று விதியுண்டு. இரண்டு மணிக்கு நூலைச் சிட்டம் போட்டு நெசவுக்குக் கொடுப்பார்கள். நெசவு கற்பிக்க ஓர் ஆசிரியர் இருந்தார். நெய்த ஆடைகள் குருகுல மாணவர்கட்கே பயன்படும்.

மாலை மூன்று மணிக்கு வகுப்புத் தொடங்கும். ஐந்துமணிக்குக் கலையும். இறுதியில் நடப்பது இசை வகுப்பு.

ஐந்து மணிக்குப் பிறகு சாரண வகுப்பும் நடக்கும். சில மாணவர் 'சடுகுடு,' 'உப்புக்குந்தம்' முதலியன விளை யாடுவர். சில மாணவர் பந்தாடுவர். சிலர் தோட்ட வேலையும், சிலர் வயல் வேலையும் செய்வர். சிலர் நீர் இறைப்பர். சிறிதும் சோம்பலின்றி மாணவர்கள் சுறு சுறுப்பாக வேலை செய்வது பார்க்க மகிழ்ச்சியைத் தரும்.

ஆறுமணிக்கு எல்லோரும் கிணற்றடிக்கு வருவர். முகம் கைகால்களைக் கழுவிக்கொண்டு, திருநீறு பூசி, மாலை வழிபாடு நடத்துவர். பிறகு, ஒன்றுகூடிப் 'பஜனை' செய்வர்; நாட்டுப்பாடல் பாடுவர். பாட்டுக்கு 'ஜாலரா' ஒன்றுதான் இசைக்கருவியாக இருக்கும். எனினும், உருக்கமாக உள்ளத்தைக் குழைவிக்கும். சில நாட்களில் மாணவர்கள் சுத்தானந்த பாரதியாருடன் கலந்து பாடு வார்கள்.

'பஜனை' முடிந்தவுடன் உணவு நடக்கும். சிறிது உலாவிய பின் ஒன்பது மணி வரையில் விளக்கிற் பாடம் படிப்பர். பிறகு, ஐயர் மாணவர்களைக் கூட்டிக் கதை சொல்வார். கதையில் வீரமும் நாட்டுப்பற்றும் கமழும்.

பத்துமணிக்குப் படுக்கைக்குச் செல்வர்.

குருகுலத்தில் மாணவர்களின் ஒழுக்கம் கண்ணுங் கருத்துமாய்ப் போற்றப்பட்டது. ஐயர் சிறிதும் வழு வாமல் நன்கு கண்காணித்தார்.

### திருவிழா

குருகுலத்தில் பெரியோர்களின் திருநாட்கள் கொண் டாடப்பெறும். பாரதியார், திலகர், காந்தி முதலியோ

ரின் பிறந்தநாள் விழாக்கள் சிறப்புடன் கொண்டாடப் பெற்றன. தீபாவளி, பொங்கல், நவராத்திரி முதலிய கொண்டாட்டங்களும் நடந்தன. அப்போதெல்லாம் மாணவர்கட்கு நல்லுண்டியும் செவியுணவாகப் பெரியோர்களின் சொற்பொழிவும் மாலை நேரத்தில் மற்போர் முதலியனவும் நடைபெறும். வெளியிலிருந்து சில மல்லர்கள் வந்து 'ஆசிரமத்தில்' இரண்டொருநாள் தங்கியிருப்பதுண்டு.

## உணவு

'ஆசிரம'த்தின் தொடக்க நிலையில் எளிய உணவே நடைபெற்றது. காலையில் வாழைப்பழம், வேர்க்கடலை, மோர் கொடுப்பார்கள். பதினொரு மணிக்குக் கேழ்வரகுக் களியும், பருப்புடன் காய்கறிகளின் கூட்டும் மோரும் ஆகிய மூன்றும் உணவாகும். சில நாட்களில் அரிசிச் சோறும் கிடைக்கும். மாலை ஆறு மணிக்குச் சில நாட்களிற் புதிய சோறும், சில நாட்களில் நீர்விட்டு வைத்த சோற்றுடன் கறிகாய்க் கூட்டும் கிடைக்கும். ஆசிரியர்களுக்கும் இவ்வாறே உணவு. ஐயருக்கு நிலக்கடலை, வாழைப்பழம், தயிர் மூன்றும் உணவு. சுத்தானந்த பாரதியார் நிலக்கட்லையும், வாழைப்பழமுமே உண்பர். புளியும் மிளகாயும் வெங்காயமும் சேர்ப்பதில்லை.

இத்தகைய உணவு மாணவர்களிற் பலருக்குப் பிடிப்பதில்லை. கடவுள் வாழ்த்தின்போது 'வீரமும், திருவும், ஆற்றலும், அறிவும் அருள்க!' என எல்லோரும் இறைவனை வேண்டும்போது, ஒரு பையன் 'கடவுளே! எனக்கு ஒரு மிளகாய்ப்பழம் அருள்க!' என வேண்டினும்.

தீபாவளியன்றும் கேழ்வரகுக் களி வெல்லம் கலந்து மாணவர்க்குக் கொடுக்கப்பட்டது. சில மாணவர்கள், 'இன்றுமா இவ்வுணவு?' என ஏங்கினராம்.

ஒரு மாணவன்,

"அன்றும் இன்றும் கேப்பைக்களி!
அடை மழைக்கும் கேப்பைக்களி!
தீராத கேப்பைக்களி!
தீவாளிக்கும் கேப்பைக்களி!

என்று பாடினனும். சிறுவர்களின் குறும்புத்தனம் இப்படித்தான் இருக்கும்! வருவாய்க்கேற்ற உணவுதானே கிடைக்கும்? உண்ண வந்தோமா, படிக்க வந்தோமா என்று உள்ளங் கொள்வது சிறுவர்கட் கியலுமா? மேலும், வீட்டில் நல்லுணவுடன் பழகிய சிறுவரின் நாவானது சுவையற்ற எளிய உணவை உட்கொள்வது எங்ஙனம்?

நாளடைவில் நல்லுணவு நல்கப் பெற்றது.

### பலரும் அறிந்தனர்

குருகுல நிகழ்ச்சிகள் பால பாரதியிலும் சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்களிலும் வெளியாயின. டாக்டர் ராஜன், ராஜாஜி, பிரகாசம், ராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு போன்ற பெருந்தலைவர்களும் நேரில் வந்து கண்டு மகிழ்ந்து வாழ்த்தினர்.

மகாதேவ ஐயர் என்னும் பெரியார் மலாய் நாட்டிற்குச் சென்று இருபதினாயிரம் ரூபா வரையிற் கையொப்பம் பெற்றார். டாக்டர் ராஜன் போன்ற பெரியார்களும் ஆதரவு செய்வதாகச் செப்பினர். பொருள் யாவும் வந்தால் ஆசிரமத்திற்கு நல்ல கட்டடமும், பொறிக்கலை

முதலியனவும் தொடங்கலாமென ஐயர் திட்டமிட்டிருந் தார் எனத்தெரிகிறது.

## குருகுல வீழ்ச்சி

ஆசிரமத்தில் சாதி வேறுபாடு நோக்காமல் எல்லோ ரும் ஒருங்கேயே அமர்ந்துண்டனர். ஆனால், இரு பார்ப் பன மாணவர்கள் மட்டும் தனியே உள்ளில் வைத்து உணவளிக்கப் பெற்றனர். இது சிறிது சிறிதாகப் பரவித் தமிழ்நாடும் மலேயாவும் அறிந்தன. வரதராஜுலு நாயுடு வும் ராமசாமி நாயக்கரும் வந்து நேரிற் பார்த்துச் சென்றனர். திருவண்ணாமலையில் நடந்த காங்கிரஸ் கூட் டத்தில் இச்செயல் கண்டிக்கப்பெற்றது. ஆங்காங்கே செய்தித் தாள்களிலும், நேரே கடித வாயிலாகவும், 'சேரமாதேவி ஆசிரமம் சாதிப் பிரிவினைக்கு இடமளிக் கிறது,' என்று கூக்குரல் கிளம்பியது. ஐயர், அந்த இரண்டு மாணவர்களையும் விலக்கியிருந்தால் சீர்பட்டி ருக்கும். அவர் அவ்வாறு செய்யவில்லை.

அப்போது காந்தியடிகள் சென்னைக்கு வந்திருந்தார். அவர் தலையிட்டும் நாட்டின் கொந்தளிப்பு அடங்க வில்லை.

ஆகவே, மலாய் நாட்டிலிருந்து வரும் தொகை அப் படியே நின்றுவிட்டது. ஐயரின் மனமும் உடைந்தது. குருகுலத்தின் செல்வாக்கும் குறைந்தது. 1922-ஆம் ஆண்டு தொடங்கிய குருகுலம் 1924-ஆம் ஆண்டு வரை யில் ஒழுங்காகவே நடந்துவந்தது. அந்த ஆண்டின் இறு தியிலேதான் வேறுபாட்டுணர்ச்சி யெழுந்து அலைமோதி யது. மாணவர்களின் தொகை குறைந்தது எனினும், குருகுலம் நடந்துவந்தது.

## இறுதிக்காலம்

ஐயருக்குச் சுபத்ரா என்னும் பெண்ணும், கிருஷ்ண மூர்த்தி என்னும் பிள்ளையும் இருந்தனர். சுபத்ரா அப்போது 'மங்கை'யாக இருந்தாள். அழகும் அறிவும் பொருந்திய அணங்காக விளங்கினாள். ஐயர் அப்பெண்ணைக் கண்போலக் காப்பாற்றி வந்தார். அவள் ஆசிரமத்திலேயே தங்கிக் கலை பயின்று வந்தாள்.

3—7—1925-இல் 'ஆசிரம' மாணவர்கள் பலர் பாபநாசம் நீர்வீழ்ச்சியைப் பார்க்கப் புறப்பட்டனர். ஐயர் அவர்களை அன்புடன் ஆசி கூறி விடுத்தார். அப்போது, ஐயர் மகள் சுபத்திராவும் நீர்வீழ்ச்சியைக் காண விழைந்தாள். முதல்நாளே இதுபற்றிப் பிடிவாதம் பிடித்திருந்தாள். ஆகையால், ஐயர் அவளை நீர்வீழ்ச்சிக்கு அழைத்துச்செல்ல நேர்ந்தது.

கலியாண அருவி யெனும் பெயரையுடைய பாபநாசம் நீர்வீழ்ச்சியின் அழகை எவ்வாறு இயம்புவது? ஏறக்குறைய எண்பதடி உயரத்திலிருந்து நுரைகளைச் சிந்திச் சிந்திப் படபடவென இடிபோல முழங்கி விழும் அருவியை ஐயரும் மகளும் மகனும் மற்ற மாணவரும் ஆசிரியர்களும் கண்டுகளித்தனர். தொலைநோக்காடியாற் குற்றாலவளங்களை யெல்லாங் கண்டு கரைகாணா இன்பம் எய்தினர். மாணவர்களும் ஐயரும் அருவியில் மீனெனத் துள்ளி விளையாடி நீந்தினர். காலைக்கதிரவனின் பொன்னொளி பட்டுக் கண்ணைக் கவரும் அழகுடன் எழுநிற ஒளிவீசும் அருவியின் பேரழகிலே பெரிதும் மனத்தைப் பறிகொடுத்தனர்.

பிறகு, அருவியின் ஓரத்தில் ஐயரும் மகளும் அமர்ந்து இயற்கையழகிலே ஈடுபட்டிருந்தனர். மாணவர்

களிற் சிலர் பாறைகளின்மீது அருவியின் இருபக்கங்களுக்கும் ஒருவர் கையை ஒருவர் பற்றியவாறு நடந்து சென்றனர். வழுக்கும் பாறைகளின் வழியே விரைந்து படிந்து குதித்துக் குதித்துச் செல்லும் அருவியைக் கடப்பது ஊறு செய்வதாயினும், காளைகளான மாணவர்கள் அஞ்சாமற் போய்வந்து கொண்டிருந்தனர்.

சுபத்திராவுக்குத் தானும் அருவியைக் கடந்து செல்லவேண்டும் என்னும் அவா எழுந்தது. படிப்படியாக மேலோங்கியது. தன் தந்தையிடம் விடை கேட்டாள். அவர் அருவியின் உட்குப் காட்சியை உளம்பட விளக்கினார். "தவறினாற் போதும்! எமன் வாயில் வீழ வேண்டியதுதான்! சிறு பெண்ணாகிய உன்னால் இதனைக் கடக்கமுடியாது. வற்புறுத்தாதே," என அன்புடன் கடிந்தார்.

"பேச்சில் வீரமுழக்கம் செய்கிறீர்கள். இப்போது செயலிற் கோழையாக ஆக்குகிறீர்கள்," எனத் தன் தந்தையைச் சினந்து கூறினாள். 'எப்படியும் போகத் தான் வேண்டும்,' என வற்புறுத்தினாள். அவள் பிடிவாதத்திற்கு மருந்து காணமுடியாமல் ஐயர் அவளைக் கையிலேந்திச் சென்றார். இடையில் ஒரு பாறையில் நிறுத்தினார். மாணவர்களைத் திரும்பி நோக்கினார். அவ்வளவு தான்! பொற்கொடி போன்ற சுபத்திரை அருவியின் திறந்த வாயிலே தவறி வீழ்ந்துவிட்டாள். 'ஐயோ, அப்பா!' என்ற குரல் ஐயரின் உயிரைப் பிழிந்தது. மாணவரை நோக்கிய ஐயரின் கண்கள் மகளை நோக்கின! 'ஆ! சுபத்திரா!' என இடிபோற் குமுறியவாறு அருவியில் ஐயரும் மகளைத் தாவிப் பிடிக்கக் குதித்தார். அவரும் மகளுடன் அருவியின் பெரும்பசிக் குணவானார்.

இவ்வாறு ஐயரின் வீரவாழ்க்கை முற்றியது; ஐயருடைய தமிழ்ப்பற்றுக்கும் முடிவு வந்தது; நாட்டுப்பற்றும் நலிந்தது! ஐயரின் காலம், *2—4—1881* முதல் *3—7—1925* வரை.

### பிறகு

ஐயரை இழந்த அவர் குடும்பமும் 'ஆசிரம'மும் அடைந்த ஏக்கத்தை அளவிடல் ஒவ்வுமோ? பாக்கிய லட்சுமி அம்மாளின் அத்தான் பசுபதி ஐயரவர்களே அக்குடும்பத்திற்குப் புகலானுர் ஐயரின் மகனுர் கிருஷ்ண மூர்த்தி, டாக்டர் தேர்வு பெற்று இப்போது திரிசிராப் பள்ளிக்கு அடுத்த மண்ணச்சநல்லூரில் மருத்துவத் தொழில் புரிந்து வருகிருர்.

ஆசிரமம் ஏழாண்டுகள் வரையில் மகாதேவ ஐயராற் பரிவுடன் ஓம்பப்பட்டு வந்தது. எனினும், ஆசிரம ஊழியர்கள் விலகினர். மாணவர்கள் போய்விட்டனர். மூவாயிரம் நூல்கள் அடங்கிய நூல்நிலையத்திலிருந்து பல நூல்கள் போய்விட்டன. அச்சுக்கூடம் கலைந்தது. இவ்வளவுக்கும் மனவுறுதி தளராமல் மகாதேவ ஐயர் அதனைக் காப்பாற்றி வந்தார். 'ஹரிஜன' இயக்கத்திற்காகக் காந்தியடிகளின் சுற்றுப் பயணத்தின்போது திருநெல்வேலியும் வந்தது. மகாதேவ ஐயர் அப்போது அடிகளிடம் ஆசிரமத்தையும், மிகுந்த பொருள்களையும் ஏறக்குறைய இரண்டாயிரத்து எழுநூறு ரூபாவையும் ஒப்பித்துவிட்டார். அடிகளால் அவை டாக்டர் ராஜன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

பிறகு, 'ஹரிஜன'த் தொண்டில் ஈடுபட்ட சங்கரநாராயண ஐயரெனும் பெரியார் ஓராண்டுவரை சேரமா

தேவி குருகுலத்தை வளர்க்க முயன்றார். ஆதரவு கிடைக்காமல் அவரும் வெளியேறினார். இப்போது தமிழ்நாட்டு 'ஹரிஜன' சேவா சங்கத்தார் அதனையேற்று நடத்துகின்றனர். பள்ளிக்கூடமும் பயிர்ப்பண்ணையும் நடக்கின்றன. இவைகளே ஐயரின் நினைவுச் சின்னங்கள்.

எளிய வாழ்வும் நாட்டுநலன் கருதிய பணியும் அஞ்சா நெஞ்சும் உடையவராய் வாழ்ந்த ஐயரின் ஆன்மா நாட்டின் விடுதலையிலே சுழன்றுகொண்டிருந்தது. இப்போது அமைதியடைந்திருக்கும். அவர் தொண்டு வாழ்க!

கழக வெளியீடு—௫௯௭



*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office :*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

விலை ரூ. 1-2.

அப்பர் அச்சகம், சென்னை-1.